بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِيۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِيۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ

தொகுதி 7

இதழ் 20

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

17 ஷவ்வால் 1443 ஹிஜ்ரி கமரி 19 ஹிஜ்ரத் 1401 ஹிஜ்ரி ஷம்ஸி 19 மே 2022


## அல்லாஹ்வின் கட்டளை

وَاَنۡذِرۡ بِهِ الَّذِيۡنَ يَخَافُوۡنَ اَنۡ يُّحۡشَرُوۡۤا اِلٰى رَبِّهِمۡ لَيۡسَ لَهُمۡ مِّنۡ دُوۡنِهٖ وَلِىٌّ وَّلَا شَفِيۡعٌ لَّعَلَّهُمۡ يَتَّقُوۡنَ

தங்கள் இறைவனிடம் தாங்கள் ஒன்று சேர்க்கப்படுவோமென்றும் (அச்சமயம்) அவனையன்றி (எந்தவொரு) நண்பருமில்லை, பரிந்து பேசுபவருமில்லை என்றும் அஞ்சுகின்றவர்கள், இறையச்சத்தை மேற்கொள்ளும் பொருட்டு நீர் இதனைக் கொண்டு அவர்களை எச்சரிக்கை செய்வீராக. (6:52)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**தனது அறிவு மற்றும் புத்திசாலித்தனத்தின் மீதோ அல்லது தனது செல்வத்தின் மீதோ பெருமை கொள்கின்ற மனிதன் அறிவிலி ஆவான். ஏனென்றால் அவை அனைத்தும் அல்லாஹ்வால் அருளப்பட்டதாகும். அவன் எங்கிருந்து கொண்டு வந்தான்?**

**மனிதன் தனது பலவீனம் மற்றும் இயலாமையைக் குறித்து முழுமையாக எண்ணிப் பார்க்க வேண்டும். அவன் எந்த அளவிற்கு தனது பலவீனங்களை சீர்தூக்கிப் பார்ப்பானோ அதே அளவிற்கு தன்னை அல்லாஹ்வின் உதவியின் தேவையுடையவனாக காண்பான். இவ்வாறு அவனிடத்தில் துஆவிற்கான ஓர் உணர்வு உருவாகி விடும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

خُلِقَ الۡاِنۡسَانُ ضَعِيۡفًا அதாவது மனிதன் பலவீனமான படைப்பு ஆவான் என்ற விஷயம் உண்மையாகும். அல்லாஹ்வின் அருளும் கருணையும் இன்றி மனிதனால் எதுவும் செய்ய முடியாது. அவனது இருப்பு, அவனது பராமரிப்பு, அவன் எஞ்சியிருப்பதற்கான விஷயங்கள் உட்பட அனைத்து விஷயங்களும் அல்லாஹ்வின் அருளை சார்ந்துள்ளன. தனது அறிவு மற்றும் புத்திசாலித்தனத்தின் மீதோ அல்லது தனது செல்வத்தின் மீதோ பெருமை கொள்கின்ற மனிதன் அறிவிலி ஆவான். ஏனென்றால் அவை அனைத்தும் அல்லாஹ்வால் அருளப்பட்டதாகும். அந்த மனிதன் எங்கிருந்து அதனைக் கொண்டு வந்தான்? மனிதன் தனது பலவீனம் மற்றும் இயலாமையைக் குறித்து முழுமையாக எண்ணிப் பார்க்க வேண்டும். அவன் எந்த அளவிற்கு தனது பலவீனங்களை சீர்தூக்கிப் பார்ப்பானோ அதே அளவிற்கு தன்னை அல்லாஹ்வின் உதவியின் தேவையுடையவனாக காண்பான். இவ்வாறு அவனிடத்தில் துஆவிற்கான ஓர் உணர்வு உருவாகி விடும். உதாரணமாக மனிதன் துன்பத்திற்கு ஆளாகும்போதும், துன்பம் மற்றும் கஷ்டத்தை உணரும்போதும் மிக அழுத்தத்துடன் துஆ செய்கின்றான். அழுகின்றான். பிறரிடம் உதவி வேண்டுகின்றான். அதேபோன்று அவன் தனது பலவீனங்களையும், தடுமாற்றங்களையும் சீர்தூக்கிப் பார்த்தால் அவன் எப்போதும் அல்லாஹ்வின் உதவியின் தேவையுடையவனாக தன்னை காண்பான். மேலும்

(தொடர்ச்சி 8 வது பக்கம்…)

**திருக்குர்ஆனைத் தவிர வேறு எந்த போதனை உலகத்தின் கருத்து வேறுபாடுகளை அகற்ற முடியும்? இந்த வேதம் இறைவன் புறமிருந்து வந்துள்ளது என்பது உலகத்திற்கு தெரிந்து விட்டால் அப்போது அது தனது எண்ணங்களை விட்டு விடும்**

وَمَاۤ اَنۡزَلۡنَا عَلَيۡكَ الۡكِتٰبَ اِلَّا لِتُبَيِّنَ لَهُمُ الَّذِى اخۡتَلَفُوۡا فِيۡهِ‌ۙ وَهُدًى وَّرَحۡمَةً لِّقَوۡمٍ يُّؤۡمِنُوۡنَ

பொருள்: அவர்கள் கருத்து வேற்றுமை கொண்டிருப்பதை, அவர்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காகவும், நம்பிக்கை கொண்ட மக்களுக்கு ஒரு நேர்வழியாகவும், கருணையாகவுமே அன்றி இவ்வேதத்தை நாம் உம் மீது இறக்கவில்லை. **(16:15)**

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சூரா அந்–நஹ்லின் 65 வது வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

இறைவேதம் இறங்கியதற்கு மற்றுமொரு தேவையும் உள்ளது. அதாவது உலகில் மக்களிடத்தில் ஒழுக்கம் மற்றும் மார்க்க விவகாரங்களில் கடுமையான கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. இறைவன் புறமிருந்து ஓர் உறுதியான அறிவு கிடைத்திடாத வரை இந்த கருத்து வேறுபாடு எவ்வாறு நீங்க முடியும்? எனவே அந்த அறிவை வழங்குவதற்கு இந்த வேதம் இறங்கியுள்ளது. இதனைத் தவிர வேறு எந்த போதனை உலகின் கருத்து வேறுபாடுகளை அழிக்க முடியும்? திருக்குர்ஆனைத் தவிர வேறு எந்த போதனை உலகத்தின் கருத்து வேறுபாடுகளை அகற்ற முடியும்? இந்த வேதம் இறைவன் புறமிருந்து வந்துள்ளது என்பது உலகத்திற்கு தெரிந்து விட்டால் அப்போது அது தனது எண்ணங்களை விட்டு விடும். ஏனென்றால் இயல்பாகவே ஒவ்வொரு மனிதனும் தனது எண்ணங்களுக்கு பிறரின் எண்ணங்களை விட முக்கியத்துவம் வழங்குகின்றான். இந்த வசனத்தில் இந்த விஷயத்தின் பக்கமும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. முந்தைய நபிமார்களுக்குப் பிறகு நபிமார்கள் வருவதில் உங்களுக்கு ஆட்சேபனை உள்ளது. பிந்தைய நபி உங்களின் செயல்களின் காரணமாகவே வந்துள்ளார்.

(தொடர்ச்சி 8 வது பக்கம்…)

## நபிமொழி

**1968:** ஹஸ்ரத் அப்துல்லாஹ் ஸ்வாயி அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சல்மான் (ரலி), அபூ தர்தா (ரலி) ஆகிய இருவரையும் சகோதரர்களாக ஆக்கினார்கள். ஹஸ்ரத் சல்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூதர்தாவைச் சந்திக்க சென்றபோது உம்மு தர்தாவை அழுக்கடைந்த ஆடை அணிந்திருக்கக் கண்டார்கள். உமக்கு என்ன நேர்ந்தது? என்று அவரிடம் ஹஸ்ரத் சல்மான் கேட்டதற்கு, உம்மு தர்தா (ரலி), உம் சகோதரர் அபூதர்தாவுக்கு இவ்வுலகில் எந்தத் தேவையுமில்லை என்று கூறினார். (சற்று நேரத்தில்) அபூதர்தா வந்தார். அன்னார் ஹஸ்ரத் சல்மான் (ரலி) அவர்களுக்காக உணவு தயாரித்தார்கள். பின்னர் ஹஸ்ரத் சல்மானிடம், உணவு உண்ணுங்கள். நான் நோன்பு நோற்றுள்ளேன் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் சல்மான் (ரலி), நீங்கள் உண்ணும் வரை நான் உண்ண மாட்டேன் என்று கூறினார்கள். (வஹப் கூறினார்) ஹஸ்ரத் அபூதர்தாவும் உணவு உண்டார். இரவானதும் ஹஸ்ரத் அபூதர்தா (ரலி) எழுந்து நின்று இறைவணக்கம் செய்யத் தொடங்கினார்கள். அப்போது ஹஸ்ரத் சல்மான் (ரலி), உறங்குவீராக என்று கூறியதும் அன்னார் உறங்கி விட்டார்கள். பின்னர் எழுந்து நின்று இறைவணக்கம் செய்யத் தயாரானர்கள். அப்போது மீண்டும் ஹஸ்ரத் சல்மான், உறங்குவீராக என்றார்கள். இரவின் கடைசி பகுதி வந்ததும் ஹஸ்ரத் சல்மான் (ரலி), இப்போது எழுவீராக என்று கூறினார்கள். இருவரும் தொழுதனர். பிறகு ஹஸ்ரத் அபூதர்தாவிடம் ஹஸ்ரத் சல்மான் (ரலி), நிச்சயமாக உம் இறைவனுக்கு நீர் செய்ய வேண்டிய கடமைகள் இருக்கின்றன. உமக்கு நீர் செய்ய வேண்டிய கடமைகள் இருக்கின்றன. உம் குடும்பத்திற்கு நீர் செய்ய வேண்டிய கடமைகள் இருக்கின்றன. அவரவருக்குரிய கடமைகளை நிறைவேற்றுவீராக என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் அபூதர்தா (ரலி), ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து இந்த விஷயத்தை கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் சல்மான் (ரலி) உண்மையை கூறியுள்ளார் என்றார்கள். (சஹீஹ் புகாரி தொகுதி 3, பாடம் நோன்பு – 2008 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## இந்த இதழில்


*திருக்குர்ஆன்*

*நபிமொழி*

*மல்ஃபூஸாத்*

*தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை )*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை – 15 ஏப்ரல் 2022*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜப்பான் சுற்றுப்பயணம் – 2013 ஆம் ஆண்டு*

*ஹுஸூர் அவர்களுடன் இந்திய லஜ்னா இமாயில்லாஹ் தேசிய செயற்குழுவின் ஆன்லைன் சந்திப்பு*



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

**எனது தந்தை கலீஃபா ஆக்கப்பட்டபோது, அல்லாஹ் அன்னாருக்கு அமாரத்தை வழங்கியபோது, கிலாஃபத்தின் தொடக்கத்திலேயே அன்னார் எல்லா புறமிருந்தும் குழப்பவாதிகளின் குழப்பங்களையும், பொய் நபித்துவ வாதிகளின் மும்முரமான செயல்பாடுகளையும், நயவஞ்சக முர்தத்களின் கிளர்ச்சியையும் கண்டார்கள். அன்னார் (ரலி) மீது எந்த அளவிற்கு துன்பங்கள் இறங்கின என்றால் அதே துன்பங்கள் மலைகள் மீது இறங்கி இருந்தால் அது தூள் தூளாகி மண்ணோடு மண்ணாக ஆகி இருக்கும். ஆனால் அன்னார் (ரலி) அவர்களுக்கு தூதர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்ற பொறுமை வழங்கப்பட்டது – ஹஸ்ரத் ஆயிஷா (ரலி)**

**ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் புவியியல் அமைப்பின் ஆழமான அறிவு படைத்திருந்தார்கள். பூமியின் அடையாளங்களையும், மனித வசிப்பிடங்களையும், அரபு தீப கற்பங்களின் வழிகளையும் நன்கு அறிந்திருந்தார்கள். ஒரு வகையில் அரேபிய தீபகற்பம் முழு வடிவில் அன்னாரின் கண்களுக்கு முன்னால் இருந்தது**

**ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அனுப்பி வைத்தப் படையினர் தங்களுக்குள் தொடர்பில் இருந்தனர். இது கிலாஃபத்தின் வெற்றிகளில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருந்தது. ஏனென்றால் அந்தப் படைகளில் தலைமையின் நிபுணத்துவத்துடன் அழகிய நிர்வாகமும் அமைந்திருந்தது**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 15 ஏப்ரல் 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 -ஆம் ஆண்டு ஷஹாதத் மாதம் **15 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

கடந்த குத்பாவிற்கு முன்பாக ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் சம்பவங்களைக் குறித்து குத்பா கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. மார்க்கத்தை புறக்கணித்ததன் காரணமாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முர்தத்களுக்கு தண்டனை வழங்கவில்லை. மாறாக, அந்த மக்களின் கிளர்ச்சி மற்றும் போருக்கான பதிலடி கொடுக்கப்பட்டது தொடர்பான நிரூபணமான சான்றுகள் அதில் எடுத்துரைக்கப்பட்டன. இது குறித்து இக்காலத்தின் நீதி நெறி தீர்ப்பவரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலத்தில் நிகழ்ந்த மார்க்க புறக்கணிப்பை வரம்பு மீறுதல் மற்றும் கிளர்ச்சியுடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளார்கள்.

எனவே அதனைக் குறிப்பிட்டவாறு அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு எவ்வளவு துணிவும், தைரியமும் இருந்தது என்பதை விவரித்தவாறு அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத்தின் காலம் அச்சம் மற்றும் துன்பத்திற்கான காலமாக இருந்தது என்ற விஷயம் ஆராய்ச்சியாளர்களுக்கு மறைவாக இருக்கவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்தவுடன் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்கள் மீது துன்பங்கள் வந்தன. ஏராளமான நயவஞ்சகர்கள் முர்தத் ஆகி விட்டனர். முர்தத் ஆனவர்களின் பேச்சுக்கள் வரம்பு மீறின. மேலும் பொய்களை இட்டுக்கட்டி கூறும் ஒரு கூட்டத்தினர் நபித்துவ வாதம் செய்து விட்டனர். மேலும் காடுகளில் வசிக்கும் பெரும்பாலான குடிமக்கள் அவர்களைச் சுற்றி ஒன்று கூடினர். எந்த அளவுக்கென்றால், முஸைலமா கத்தாப் என்பவனுடன் சுமார் ஒரு லட்சம் அறிவீனர்களும், தீய ஒழுக்கம் கொண்ட மனிதர்களும் இணைந்து கொண்டனர். மேலும் குழப்பம் கிளர்ந்து விட்டு எழுந்தது. துன்பங்கள் அதிகரித்து விட்டன. அபாயங்கள் அருகிலும், தொலைவிலும் சூழ்ந்து கொண்டன.

நம்பிக்கையாளர்கள் மீது ஒரு கடுமையான நில நடுக்கம் ஏற்பட்டு விட்டது. அந்த நேரத்தில் அனைத்து மக்களும் சோதிக்கப்பட்டார்கள். அபாயகரமான, சுயநினைவை இழக்கச் செய்யும் நிலைமைகள் வெளிப்பட்டன. நம்பிக்கையாளர்கள் பரிதவித்திருந்தார்கள். அவர்களின் உள்ளங்களில் நெருப்பு கங்குகள் போடப்பட்டது போன்றும் அல்லது கத்தியால் அறுக்கப்பட்டவர்களைப் போன்றும் அவர்கள் இருந்தார்கள். சில நேரம் கைருல் பரிய்யா (ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்) அவர்களின் பிரிவின் காரணமாக ஏற்பட்ட அந்த குழப்பங்கள் எரித்து சாம்பலாக்கக் கூடிய நெருப்பின் வடிவில் வெளிப்படுவதைப் பார்த்து அவர்கள் அழுது கொண்டிருந்தார்கள். அமைதிக்கான எந்த அடையாளமும் இருக்கவில்லை. குப்பை குளங்களில் முளைத்த செடிகளைப் போன்று குழப்பவாதிகள் படர்ந்து விட்டனர். நம்பிக்கையாளர்களிடம் அச்சமும், பதற்றமும் அதிகரித்துக் கொண்டு சென்றது. உள்ளம் அச்சத்தாலும், நிம்மதியின்மையாலும் நிறைந்திருந்தது.

அதுபோன்ற நெருக்கடியான நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் காலத்தின் ஆட்சியாளனாகவும், ஹஸ்ரத் காத்தமுன் நபிய்யீன் அவர்களின் கலீஃபாவாகவும் ஆக்கப்பட்டார்கள். நயவஞ்சகர்கள், நிராகரிப்பாளர்கள் மற்றும் முர்தத்கள் ஆகியோரின் நடவடிக்கைகளையும், வழிமுறைகளையும் அன்னார் (ரலி) கண்டிருந்தார்கள். அதன் காரணமாக அன்னார் (ரலி) வேதனையில் மூழ்கி விட்டார்கள். அவர்கள் விடா மழையைப் போன்று அழுதார்கள். மேலும் பாய்ந்தோடும் நீரூற்றைப் போன்று அன்னாரின் கண்ணீர் வழிந்தோடியது. அன்னார் (ரலி) தனது அல்லாஹ்விடம் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களின் நன்மைக்காக துஆ வேண்டினார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அன்னார் (ரலி) கூறினார்கள்: எனது தந்தை கலீஃபா ஆக்கப்பட்டபோது, அல்லாஹ் அன்னாருக்கு அமாரத்தை வழங்கியபோது, கிலாஃபத்தின் தொடக்கத்திலேயே அன்னார் எல்லா புறமிருந்தும் குழப்பவாதிகளின் குழப்பங்களையும், பொய் நபித்துவ வாதிகளின் மும்முரமான செயல்பாடுகளையும், நயவஞ்சக முர்தத்களின் கிளர்ச்சியையும் கண்டார்கள். அன்னார் (ரலி) மீது எந்த அளவிற்கு துன்பங்கள் இறங்கின என்றால் அதே துன்பங்கள் மலைகள் மீது இறங்கி இருந்தால் அது தூள் தூளாகி மண்ணோடு மண்ணாக ஆகி இருக்கும். ஆனால் அன்னார் (ரலி) அவர்களுக்கு தூதர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்ற பொறுமை வழங்கப்பட்டது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எந்த அளவுக்கென்றால் அல்லாஹ்வின் உதவி வந்தடைந்தது. பொய் நபித்துவவாதிகள் கொலை செய்யப்பட்டனர். முர்தத்கள் அழிக்கப்பட்டனர். குழப்பங்கள் அகற்றப்பட்டன. துன்பங்கள் நீங்கின. விவகாரங்கள் தீர்க்கப்பட்டன. கிலாஃபத் விவகாரம் உறுதியானது. மேலும் அல்லாஹ் மூமின்களை பேரழிவுகளிலிருந்து பாதுகாத்து விட்டான். அவர்களின் அச்சத்தின் நிலையை அமைதியின் நிலையில் மாற்றினான். அவர்களின் மார்க்கத்திற்கு வலிமையை வழங்கினான். மேலும் ஓர் உலகை உண்மையில் நிலைநிறுத்தி விட்டான். குழப்பவாதிகளின் முகங்கள் கருமையாக்கப்பட்டன. மேலும் தனது வாக்குறுதியை இறைவன் முழுமை செய்தான். மேலும் தனது அடியார் (ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி)) சித்தீக் (ரலி) அவர்களுக்கு உதவி செய்தான். வரம்பு மீறிய தலைவர்கள் மற்றும் சிலைகளை அழித்து நாசமாக்கி விட்டான். நிராகரிப்பாளர்களின் உள்ளங்களில் எப்படிப்பட்ட திகிலை ஏற்படுத்தினான் என்றால் அவர்கள் முற்றிலும் நம்பிக்கை இழந்து விட்டனர்.

இறுதியில் அவர்கள் மனம் திருந்தி தவ்பா செய்தனர். இதுவே கம்பீரமிக்க இறை வாக்குறுதியாக இருந்தது. அவன் அனைத்து உண்மையாளர்களை விடவும் உண்மையாளன் ஆவான்.

எனவே சிந்தித்துப் பாருங்கள். கிலாஃபத்தின் வாக்குறுதி தனது முழுமையான தேட்டங்களுடனும், அடையாளங்களுடனும் (ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி)) சித்தீக் (ரலி) அவர்களின் மீது எவ்வாறு முழுமையடைந்தது? இதனை ஆய்வு செய்வதற்காக உங்களின் நெஞ்சங்களை அல்லாஹ் திறப்பதற்கு நான் அவனிடம் துஆ செய்கின்றேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சிந்தித்துப் பாருங்கள். அன்னார் கலீஃபா ஆன சமயத்தில் முஸ்லிம்களின் நிலை எப்படி இருந்தது? இஸ்லாம் துன்பங்களின் காரணமாக நெருப்பால் எரிக்கப்பட்ட மனிதரைப் போன்று (அபாயகரமான நிலையில்) இருந்தது. பின்னர் அல்லாஹ் இஸ்லாத்திற்கு அதன் வலிமையை திரும்ப வழங்கினான். அதனை ஆழமான கிணற்றிலிருந்து வெளியேற்றினான். பொய் நபித்துவ வாதிகள் வேதனைமிக்க தண்டனையால் கொல்லப்பட்டார்கள். முர்தத்கள் விலங்குகளைப் போன்று அழிக்கப்பட்டனர். மேலும் மரணித்தவர்களைப் போன்று இருந்த நம்பிக்கையாளர்களின் அச்சத்தை அல்லாஹ் அமைதியில் மாற்றினான். அந்த வேதனை நீங்கிய பிறகு நம்பிக்கையாளர் மகிழ்ச்சியடைந்து கொண்டிருந்தார்.

மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு வாழ்த்துகள் தெரிவித்துக் கொண்டிருந்தனர். அன்னாரை மகிழ்ச்சியுடன் வாழ்த்தியவாறு நம்பிக்கையாளர்கள் அன்னாரை சந்தித்து வந்தனர். அன்னாரை பாராட்டினர். மேலும் இறைவனின் சந்நிதானத்தில் அன்னாருக்காக நம்பிக்கையாளர்கள் துஆக்கள் செய்து வந்தனர். கண்ணியப்படுத்தவும், மரியாதை செலுத்தவும் நம்பிக்கையாளர்கள் அன்னாரை சுற்றி வலம் வந்தனர். மேலும் நம்பிக்கையாளர்கள் தமது உள்ளத்தின் ஆழத்தில் அன்னாரின் மீதான நேசத்திற்கு இடமளித்தார்கள். அவர்கள் தங்களது அனைத்து விவகாரங்களிலும் அன்னாரை பின்பற்றி வந்தார்கள். அன்னார் (ரலி) அவர்களுக்கு அவர்கள் நன்றியுடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் தங்களது உள்ளங்களை ஒளிமயமானதாகவும், முகங்களை பொலிவானதாகவும் ஆக்கிக் கொண்டார்கள். அன்பிலும், நேசத்திலும் முன்னேறி விட்டார்கள். முழுமையான முயற்சியுடனும், உழைப்புடனும் அன்னாருக்கு கட்டுப்பட்டார்கள். அவர்கள் அன்னார் (ரலி) அவர்களை ஒரு அருளுக்குரிய இருப்பாகவும், நபிமார்களைப் போன்று இறை உதவிகளைப் பெற்றவராகவும் அவர்கள் கருதி வந்தார்கள். இவை அனைத்தும் (ஹஸ்ரத் அபூபக்ர்) சித்தீக் (ரலி) அவர்களின் உண்மை மற்றும் ஆழமான உறுதியின் காரணமாக அமைந்திருந்தது.

(சிர்ருல் கிலாஃபா, அரபி வாசகத்தின் உருது மொழியாக்கம், நஸாரத் இஷாஅத் பதிப்பு பக்கம் 47–51)

இது அன்னாரின் அரபி நூலான சிர்ருல் கிலாஃபாவில் உள்ளது. இவை இந்த அரபி வாக்கியத்தின் மொழியாக்கம் ஆகும்.

குழப்பமும், மார்க்கப் புறக்கணிப்பும், கிளர்ச்சியும் ஏற்பட்டபோது அன்னார் (ரலி) அவர்கள் சில படைகளை அனுப்பினார்கள். ஏற்கனவே கூறப்பட்டு விட்டதைப் போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஏறக்குறைய முழு அரபு தேசமும் மார்க்க புறக்கணிப்பை மேற்கொண்டு விட்டது. சில மக்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தனர் என்றால் அவர்கள் ஸகாத் கொடுப்பதற்கு மட்டும் மறுத்து விட்டனர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் புறமிருந்து அவர்களுக்கெதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றி ஏற்கனவே கூறப்பட்டு விட்டது.

தற்போது இரண்டாவது பிரிவைப் பற்றி கூறப்படுகின்றது. அந்தப் பிரிவினர் இஸ்லாத்திலிருந்து மட்டும் புறக்கணிப்பை மேற்கொள்ளவில்லை. மாறாக, கிளர்ச்சி செய்தனர். மேலும் முஸ்லிம்களை கொலையும் செய்து கொண்டிருந்தனர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அவர்களை தண்டிப்பதற்கு உறுதி பூண்டார்கள். எனவே

بِدَايَة والنِّهَايَة என்ற நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் உஸாமா (ரலி) அவர்களின் படையின் ஓய்விற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இஸ்லாமிய படைகளுடன் வாளை ஏந்திக் கொண்டு மதீனாவிலிருந்து புறப்பட்டு துல்கஸ்ஸாவை நோக்கி சென்றார்கள். துல்கஸ்ஸா மதீனாவிலிருந்து அந்தக் காலத்தில் இருந்த பயண வழிமுறைக்கேற்ப ஓர் இரவு மற்றும் ஒரு பகலுக்கான தொலைவில் அமைந்திருந்தது. சஹாபா பெருமக்களில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் இருந்தார்கள். தாங்கள் மதீனாவிற்கு திரும்பிச் சென்று விடுங்கள். காட்டரபிகளுடன் போர் புரிவதற்காக உங்களைத் தவிர்த்து வேறொரு போர் வீரரை அனுப்புங்கள் என்று ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அன்னார் (ரலி) அவர்களிடம் வலியுறுத்திக் கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எனது தந்தை வாளை ஏந்திக் கொண்டு கால்நடையில் சவாரி செய்து புறப்பட்டார்கள். அப்போது ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள் வருகை தந்து அன்னார் (ரலி) அவர்களின் ஒட்டகத்தின் கடிவாளத்தை பிடித்துக் கொண்டார்கள். மேலும் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கலீஃபா அவர்களே! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உஹது நாளன்று கூறிய அந்த விஷயத்தை நான் தங்களிடம் கூறுகின்றேன். தாங்கள் வாளை ஏன் ஏந்தியுள்ளீர்கள்? உங்களின் உயிரை அபாயத்தில் போடுவதன் மூலம் எங்களை துன்பத்தில் ஆழ்த்தாதீர்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம், உங்களது உயிரை அபாயத்தில் போடுவதன் மூலமாக எங்களை துன்பத்தில் ஆழ்த்தாதீர்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! தங்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்றால் பின்னர் தங்களுக்குப் பிறகு ஒருபோதும் இஸ்லாத்தின் அமைப்பு எஞ்சியிருக்காது என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் திரும்பிச் சென்று விட்டார்கள். படையை (மட்டும்) அனுப்பினார்கள்.

(அல்பாதாயா வந்நஹாயா தொகுதி 3 பக்கம் 311, 312 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸாமா (ரலி) மற்றும் அன்னாரின் படையினர் ஓய்வெடுத்தார்கள். அவர்களின் சவாரிகளும் புத்தாக்கம் பெற்றன. ஸகாத் செல்வங்களும் பெருமளவில் வந்து விட்டன. அவை முஸ்லிம்களின் தேவையை விடவும் அதிகமாக இருந்தன. எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் படையினருக்கு அதை பங்கிட்டு கொடுத்து விட்டார்கள். மேலும் 11 கொடிகளை கட்டினார்கள். ஒரு கொடியை ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்காக கட்டினார்கள். மேலும் அவர் துலைஹா பின் குவைலத் என்பவனுக்கு எதிரில் செல்ல வேண்டும் என்றும், அந்தப் பணியை முடித்து விட்டு புதாஹ் எனும் இடத்தில் மாலிக் பின் நுவைரா என்பவருக்கெதிராக போரிட வேண்டுமென்றும் கட்டளையிட்டார்கள். அந்த நேரம் வரை அவர் எதிராக இருந்தால் அவருக்கெதிராக போரிட வேண்டும். அவர்கள் அனைவரும் முர்தத்களாக இருந்தனர். மேலும் போர் செய்ய விரும்பி இருந்தனர். பனூ அஸத் கோத்திரத்தின் பகுதியிலுள்ள ஒரு நீரூற்றின் பெயர் புதாஹ் ஆகும். அதன் பக்கம் அன்னார் (ரலி) அவர்களை அனுப்பினார்கள்.

ஹஸ்ரத் இக்ரிமா பின் அபீஜஹ்லுக்காக ஒரு கொடியை கட்டினார்கள். முஸைலமாவிற்கு எதிராக போரிடுவதற்கு அன்னாருக்கு கட்டளை வழங்கினார்கள். மூன்றாவது கொடி ஹஸ்ரத் முஹாஜிர் பின் அபூ உமைய்யா (ரலி) அவர்களுக்காக கட்டப்பட்டது. அன்னார் அன்ஸி படைகளுக்கெதிராக போரிட வேண்டுமென்று அன்னாருக்கு கட்டளை வழங்கப்பட்டது. பின்னர் கைஸ் பின் மக்ஸூஹ் மற்றும் யமன் வாசிகளுக்கு எதிராக உதவி செய்ய வேண்டுமென்று கூறப்பட்டிருந்தது. அப்னா என்ற கோத்திரத்தினரும், பாரசீகர்களின் ஒரு சமுதாயத்தின் சந்ததிகளாக இருந்தனர். அவர்கள் யமன் நாட்டில் குடியேறி வாழ்ந்து வந்தனர். அரேபியர்களுடன் திருமணங்கள் செய்திருந்தனர்.

அந்தப் பணியை முடித்து விட்டு கின்தா கோத்திரத்திற்கு எதிராக கிளிர்மவுத் என்ற இடத்திற்கு சென்று விட வேண்டும் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். கிளிர்மவுத்தும் யமன் நாட்டின் ஒரு பகுதியாகும். நான்காவதாக, ஹஸ்ரத் காலித் பின் ஸயீத் பின் ஆஸ் அவர்களுக்காக ஒரு கொடியை கட்டினார்கள். ஹம்கதைன் என்ற இடத்தை நோக்கி அவர்களை அனுப்பினார்கள். அது சிரியாவின் எல்லைப்புற பகுதியாக இருந்தது. ஐந்தாவதாக, ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்களுக்காக ஒரு கொடியை கட்டினார்கள். அன்னாரை குஸாஆ, வதீயா மற்றும் ஹாரிஸின் கூட்டத்தினரை எதிர்கொள்வதற்காக கட்டளையிட்டார்கள். ஐந்தாவது கொடி, ஹஸ்ரத் குதைஃபா பின் மிஹ்ஸின் கல்ஃபானி அவர்களுக்காக கட்டப்பட்டது. தபா வாசிகளின் பக்கம் செல்லும்படி அன்னாருக்கு கட்டளை வழங்கப்பட்டது. தபா என்பது அமானில் அமைந்திருந்த அரேபியர்களின் ஒரு கடை வீதியாக இருந்தது. அமான் என்பது ஒரு பழமையான மற்றும் பிரபலமான நகரமாக இருந்தது. அங்கு சந்தை அமைக்கப்பட்டு வந்தது.

ஏழாவதாக ஹஸ்ரத் அர்ஃபஜா பின் ஹர்ஷமா அவர்களுக்காக கொடி கட்டப்பட்டது. மஹ்ரா எனும் இடத்திற்கு செல்லும்படி அன்னாருக்கு கட்டளை வழங்கப்பட்டது. மஹ்ரா என்பது யமன் நாட்டின் ஒரு பகுதியின் பெயராகும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அவர்கள் இருவரிடமும், ஓரிடத்தில் ஒன்றுகூடி விடுங்கள். ஆனால் எந்த இடங்கள் ஒப்படைக்கப்பட்டனவோ அவற்றில் ஒருவர் மற்றவருக்கு அமீராக இருப்பார்கள் என்று கூறினார்கள். அதாவது முதலில் யமன் வாசிகளுக்கும் பின்னர் மற்றவர்களுக்கும்.

அடுத்து ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஷுரஹ்பீல் பின் ஹஸனா என்பவரை ஹஸ்ரத் இக்ரிமா பின் அபீஜஹைலுக்குப் பின்னால் அனுப்பி வைத்தார்கள். யமாமாவிலிருந்து திரும்பும்போது குழாஆ கோத்திரத்திற்கு எதிரில் செல்ல வேண்டுமென்றும், முர்தத்களுடனான போரின் சந்தர்ப்பத்தின்போது நீங்களே உங்களது படைக்கு அமீராக இருப்பீர்கள் என்றும் அன்னாருக்கு கட்டளை வழங்கி இருந்தார்கள்.

ஒன்பதாவதாக, துரைஃபா பின் ஹாஜிஸ் (ரலி) அவர்களுக்காக கொடி கட்டப்பட்டது. பனூ சுலைம் மற்றும் ஹவாஸ் கோத்திரங்களை எதிர்கொள்ளும்படி அன்னாருக்கு கட்டளையிடப்பட்டிருந்தது. பத்தாவது கொடி, ஹஸ்ரத் சுவைத் பின் முகர்ரன் அவர்களுக்காக கட்டப்பட்டது. மேலும் யமன் பகுதியில் திஹாமாவை நோக்கி செல்லும்படி அவர்களுக்கு கட்டளையிடப்பட்டது. பதினொன்றாவது கொடி, ஹஸ்ரத் அலா (ரலி) பின் ஹழ்ரமி அவர்களுக்காக கட்டப்பட்டது. பெஹ்ரைனுக்கு செல்லும்படி அவர்களுக்கு கட்டளையிடப்பட்டது. எனவே துல்கஸ்ஸாவிலிருந்து அந்த அமீர்மார்கள் அனைவரும் தத்தமது திசையை நோக்கி புறப்பட்டுச் சென்று விட்டார்கள்.

தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 257 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 1 பக்கம் 527, தொகுதி 2 பக்கம் 270, 311, 496 & ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் ஷக்ஸிய்யத் வ கார்நாமே பக்கம் 288)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒவ்வொரு படைப் பிரிவின் அமீருக்கும், அவர்கள் எந்தெந்த இடத்தையெல்லாம் கடந்து செல்வார்களோ அங்குள்ள வலிமை மிக்க முஸ்லிம்களை தம்முடன் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று கட்டளை வழங்கினார்கள். அதாவது சில ஆற்றல் வாய்ந்த நபர்களை அங்கேயே தமது பகுதியின் பாதுகாப்பிற்காக பின்னால் விட்டுச் செல்லுங்கள் என்று கட்டளையிட்டார்கள்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 257 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இந்த பங்கீடைப் பற்றி குறிப்பிட்டவாறு ஒரு நூலாசிரியர் இவ்வாறு எழுதுகின்றார்: துல்கஸ்ஸா இராணுவ தலைமையிடமாக ஆக்கப்பட்டது. அங்கிருந்து முறையாக இஸ்லாமிய படைகள் மார்க்க புறக்கணிப்பை மேற்கொண்ட நபர்களின் திட்டங்களை அழிப்பதற்காக பல்வேறு பகுதிகளை நோக்கி புறப்பட்டனர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் திட்டங்களிலிருந்து அன்னாரின் தனித்தன்மை வாய்ந்த புலமையும், ஆழமான புவிசார் அரசியல் அனுபவமும் தெரிய வருகின்றது. படைப் பிரிவை பங்கிட்டது மற்றும் அவர்களை உரிய இடங்களில் நிறுத்தியது ஆகியவற்றிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் புவியியல் அமைப்பின் ஆழமான அறிவு படைத்திருந்தார்கள். பூமியின் அடையாளங்களையும், மனித வசிப்பிடங்களையும், அரபு தீப கற்பங்களின் வழிகளையும் நன்கு அறிந்திருந்தார்கள். ஒரு வகையில் அரேபிய தீபகற்பம் முழு வடிவில் அன்னாரின் கண்களுக்கு முன்னால் இருந்தது.

உதாரணமாக தற்போதைய காலத்தில் புதிய தொழில்நுட்பத்தின் மூலம் ஏராளமான தலைமையிடங்கள் அமையப் பெற்றுள்ளன. படையை அனுப்பி வைப்பதற்கும், அவர்களின் திசையை நிர்ணயிப்பதற்கும், பிரிந்த பிறகு மீண்டும் ஒன்றுகூடுவதற்குமான அந்த ஏற்பாட்டை எந்த நபர் சீர்தூக்கி பார்ப்பாரோ அவருக்கு இந்த விஷயம் நன்றாக தெரிந்து விடும். அதாவது இந்த செயல் திட்டம் முழு அரேபிய தீபகற்பத்திற்கும் முன்னுதாரணமான மற்றும் சரியான கணிப்பை அடிப்படையாகக் கொண்டதாக இருந்தது. இந்தப் படைகளுடன் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளும் மிகவும் ஆழமானதாக இருந்தன. படை எங்கே உள்ளது? என்பது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு உடனுக்குடன் தெரிந்து வந்தது. படையின் செயல்பாடுகள் மற்றும் அனைத்து விவகாரங்களையும் முழுமையாக அறிந்திருந்தார்கள். மேலும் என்ன வெற்றி கிடைத்தது? நாளை என்ன நிகழ்ச்சி உள்ளது? என்பது கூட அன்னாருக்கு தெரிந்திருந்தது.

தொலைத்தொடர்புகள் மிகவும் ஆழமானதாகவும், வேகமானதாகவும் இருந்து வந்தன. போர் மைதானத்திலிருந்து செய்திகள் உடனுக்குடன் தலைமையிடமான மதீனாவில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு வந்து கொண்டிருந்தன. முழுப் படையுடனும் முழுமையான தொடர்பு இருந்து வந்தது. தலைமையகத்திற்கும் போர் மைதானத்திற்கும் மத்தியில் இராணுவ செய்திகளை எட்ட வைப்பதில் அபூ கைஸமா அன்சாரி, சலமா பின் ஸலாமா, அபூபர்ஸரா சல்மி மற்றும் சலமா பின் வக்ஷ் ஆகியோர் முக்கிய பங்களிப்பை அளித்து வந்தனர்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அனுப்பி வைத்தப் படையினர் தங்களுக்குள் தொடர்பில் இருந்தனர். இது கிலாஃபத்தின் வெற்றிகளில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருந்தது. ஏனென்றால் அந்தப் படைகளில் தலைமையின் நிபுணத்துவத்துடன் அழகிய நிர்வாகமும் அமைந்திருந்தது. அதுமட்டுமின்றி போர்களில் முன் அனுபவமும் இருந்தது. இறைத்தூதர் (ஸல்) அவர்களின் காலத்தில் போர்களில் இதே படையினரின் செயல்பாடு சிறந்த அனுபவத்தை பெற்றிருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அரசாங்கத்தின் இராணுவ அமைப்பு அரேபிய தீபகற்பத்தில் அனைத்து இராணுவ சக்திகளின் மீதும் மேன்மை பெற்றிருந்தது. அந்தப் படைகளின் தலைவராக ஸைஃபுல்லாஹ் அல் மஸ்லூல் காலித் பின் வலீத் அவர்கள் இருந்தார்கள். அன்னார் இஸ்லாமிய வெற்றிகளிலும், முர்தத்களுடனான போர்களிலும் தனித்திறமை பெற்ற நபராக இருந்தார்கள். இஸ்லாமிய படையின் இந்தப் பங்கீடு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டது. ஏனென்றால் முர்தத்கள் அதுவரை தத்தமது பகுதிகளில் சிதறி இருந்தார்கள். அதாவது ஆங்காங்கே பிரிந்து இருந்தார்கள். ஒன்றுகூடியிருக்கவில்லை. முஸ்லிம்களுக்கெதிராக அவர்களின் ஒருங்கிணைப்பு முழுமை பெறவில்லை. பெரிய கோத்திரங்கள் தொலைதூரப் பகுதிகளில் சிதறுண்டிருந்தன. அவர்கள் தங்களுக்குள் ஒரு குழுவாக ஒன்று சேர்வதற்கு போதுமான நேரம் கிடைத்திருக்கவில்லை. ஏனென்றால் மார்க்க புறக்கணிப்பு தொடங்கி அதுவரை மூன்று மாதத்தை விட அதிக காலம் கழிந்திருக்கவில்லை.

இரண்டாவதாக, அவர்களால் தங்களுக்கெதிரில் முஸ்லிம்களின் அபாயத்தை புரிந்து கொள்ள முடியவில்லை. சில மாதங்களில் அனைத்து முஸ்லிம்களையும் அழித்து விடலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள். எனவே அவர்கள் தங்களது பொய்யான கொள்கைக்கு ஆதரவாக குழுவை உருவாக்கிக் கொள்வதற்கு முன்பாக திடீரென அவர்களின் மேன்மை மற்றும் அரசாங்கத்தை அழித்து விட வேண்டும் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் விரும்பினார்கள். எனவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், அவர்களின் குழப்பங்கள் அதிகரிப்பதற்கு முன்னரே அவர்களை கவனத்தில் கொண்டார்கள். மேலும் அவர்கள் தலைதூக்குவதற்கும், நாவுகளை நீட்டுவதற்கும், அதனால் முஸ்லிம்களுக்கு துன்பங்களை அவர்கள் கொடுப்பதற்கும் அன்னார் சந்தர்ப்பம் கொடுக்கவில்லை.

(டாக்டர் அலி முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) ஷக்ஸியத் அவ்ர் கார்நாமே என்ற நூல் பக்கம் 288 – 290)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சார்பாக நிகழ்ந்த (படைத்)தலைவர்கள் நியமனம் பற்றி பல்வேறு விஷயங்களை குறிப்பிட்டவாறு ஒரு நூலாசிரியர் இவ்வாறு எழுதியுள்ளார்:

முதலாவதாக, அந்த திட்டத்தில் இந்த விஷயத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதாவது படைகளுக்கிடையிலான பரஸ்பர தொடர்புகளும், ஒத்துழைப்பும் சரி சமமாக நிலைபெற்றிருந்தது. அவர்களின் தங்குமிடங்களும், பணியிடங்களும் வேறுபட்டதாக இருந்தன. ஆயினும் அனைவரும் ஒரே சரடில் கோர்க்கப்பட்டிருநதனர். அவர்கள் தங்களுக்குள் சந்திப்பதும், பிரிவதும் ஒரே நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. கலீஃபா மதீனாவில் இருந்தபோதிலும் போர்களின் அனைத்து விவகாரங்களின் கட்டுப்பாடும், அதிகாரமும் அவரது கைகளிலேயே இருந்தது. அதாவது கலீஃபாவின் கைகளில் இருந்தது.

இரண்டாவதாக, சித்தீக்கே அக்பர் தலைநகரம் மதீனாவின் பாதுகாப்பிற்காக படையின் ஒரு பகுதியை தன்னுடன் வைத்திருந்தார். மேலும் அதேபோன்று அரசாங்க விவகாரங்களில் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை பெறுவதற்காக சஹாபிகளின் ஒரு கூட்டத்தை தம்முடன் வைத்திருந்தார்.

மூன்றாவதாக, மார்க்க புறக்கணிப்பால் பாதிப்படைந்த பகுதிகளில் இஸ்லாமிய சக்திகள்

உள்ளன என்பதை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அறிந்திருந்தார்கள். அந்த முஸ்லிம்கள் இணை வைப்பவர்களின் கோபங்களுக்கு இலக்காகி விடக் கூடாது என்ற கவலை அன்னாருக்கு ஏற்பட்டிருந்தது. எனவே அவர்களில் எவர்கள் ஆற்றலும், பலமும் பெற்றிருப்பார்களோ அவர்களை உங்களுடன் இணைத்துக் கொள்ளுங்கள். மேலும் அவர்களின் பகுதிகளில் பாதுகாப்பிற்காக சில நபர்களை அங்கு நியமியுங்கள் என்று படைத் தலைவர்களுக்கு அன்னார் (ரலி) கட்டளை வழங்கினார்கள்.

நான்காவதாக, முர்தத்களுடன் போர் செய்தவாறு اَلْحَرْبُ خُدْعَةٌ என்ற விதியை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மேற்கொண்டார்கள். படையின் இலக்காக சிலவற்றை வெளிப்படுத்துவார்கள். ஆனால் நோக்கம் வேறொன்றாக இருக்கும். மிகவும் எச்சரிக்கையுடன் போர் வழிமுறைகளை மேற்கொண்டார்கள். தங்களது திட்டம் வெளிப்பட்டு விடக் கூடாது என்பதில் கவனமாக இருந்தார்கள். இவ்வாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தலைமையின் அரசியல் நிபுணத்துவம், அறிவார்ந்த அனுபவம், உறுதியான அறிவு, இறை வெற்றி மற்றும் உதவி போன்றவை மிகத் தெளிவாக வெளிப்பட்டிருந்தது.

(டாக்டர் அலி முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) ஷக்ஸியத் அவ் கார்நாமே என்ற நூல் பக்கம் 297 – 298)

அந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இரண்டு கடிதங்களை எழுதியிருந்தார்கள். அரபு கோத்திரங்களின் பெயரில் ஒன்றும், இரண்டாவதாக படைத்தளபதிகளின் வழிகாட்டுதலுக்காகவும் எழுதினார்கள்.

(ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) கே சர்காரி கதூத் பக்கம் 22)

டாக்டர் அலி முஹம்மது ஸலாபி அவர்கள் இந்த ஒரு கடிதத்தைப் பற்றி இவ்வாறு எழுதியுள்ளார்கள்: இஸ்லாமிய படைகளின் ஆயத்தம் மற்றும் சிறந்த நிர்வாகத்திற்குப் பிறகு எழுத்துப்பூர்வமான அழைப்பின் தொடர் ஆரம்பமானதை நாம் பார்க்கின்றோம். மேலும் அது முக்கியமான பங்கு ஆற்றியது. புதிய கருத்துகளைக் கொண்ட ஒரு சாதாரண கடிதத்தில் அன்னார் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதினார்கள். முர்தத்களுடன் போர் புரிவதற்காக படையை அனுப்புவதற்கு முன் அன்னார் இந்த கடிதத்தை முர்தத்கள் மற்றும் உறுதிப்பாட்டுடன் நிலைபெறக் கூடிய அனைவருக்கு மத்தியிலும் முடிந்த வரை உயர்ந்த அளவில் பரப்புவதற்கு முயற்சி செய்தார்கள். கோத்திரங்களிடம் சிலரை அனுப்பி வைத்தார்கள். அங்கு சென்று எல்லா கூட்டங்களிலும் இந்த கடிதத்தை வாசித்துக் காட்டுங்கள் என்றும் அவர்களுக்கு கட்டளையிட்டார்கள். மேலும் யாருக்கு இந்த கடிதத்தின் கட்டுரை வந்தடைந்ததோ அவர் இதுவரை சென்றடையாத மக்களுக்கு அதை சென்றடையச் செய்ய வேண்டுமென்றும் கட்டளையிட்டிருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்த கடிதத்தில் பொது மக்கள், சமூகத்தில் சிறப்பானவர்கள் என அனைவரையும் நோக்கி உரையாடினார்கள். அவர்கள் இஸ்லாத்தில் உறுதிப்பாட்டுடன் நிலைபெறக் கூடியவர்களாக இருந்தாலும் சரியே அல்லது இஸ்லாத்திலிருந்து விலகக் கூடியவர்களாக இருந்தாலும் சரியே.

(டாக்டர் அலி முஹம்மது ஸலாபி அவர்கள் எழுதிய ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) ஷக்ஸியத் அவ் கார்நாமே என்ற நூல் பக்கம் 290 – 291)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அந்த கடிதம் அரபு கோத்திரத்தின் பெயரில் இருந்தது. அந்தக் கடிதம் மிக அதிகமான விளக்கத்துடன் தப்ரி நூலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சிர்ருல் கிலாஃபா என்ற தமது நூலில் அந்தக் கடிதத்தை குறிப்பிட்டுள்ளார்கள். அன்னார் கூறினார்கள்: முர்தத் ஆகக்கூடிய அரபு கோத்திரங்களுக்கு சித்தீக்கே அக்பர் எழுதிய அந்தக் கடித்தை நாம் இங்கு பதிவது உகந்ததாகும். ஏனென்றால் அந்தக் கடிதத்தை படிக்கக் கூடியவர் சித்தீக்கே அக்பர் அவர்களுக்கு கிடைத்த இறை அடையாளங்களையும், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் அனைத்து சுன்னத்களையும் பாதுகாப்பதற்காக அன்னார் (ரலி) மேற்கொண்ட முயற்சிகளையும் அறிந்து ஈமானிலும், அகப்பார்வையிலும் முன்னேற வேண்டும்.

அடுத்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எழுதிய அந்த கடிதம் இவ்வாறு தொடங்குகின்றது:

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ இந்தக் கடிதம் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கலீஃபாவான அபூபக்ர் சார்பாக சாதாரண மற்றும் சிறப்பான அனைத்து மக்களுக்கும் எழுதப்படுகிறது. எவர் வரை இது வந்தடையுமோ அவர் இஸ்லாத்தில் நிலை நிற்பவராக இருந்தாலும் சரி அல்லது அதிலிருந்து விலகியவராக இருந்தாலும் சரி. நேர்வழியை பின்பற்றக் கூடிய ஒவ்வொரு நபரின் மீதும் சாந்தி உண்டாகட்டுமாக. அத்தகைய நபர் நேர்வழி பெற்ற பிறகு வழிகேட்டின் பக்கமும், குருட்டுத்தன்மையின் பக்கமும் திரும்ப மாட்டார். எனவே நான் உங்களின் முன்னால் அந்த இறைவனை புகழ்கின்றேன். அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் எவனும் இல்லை. மேலும் நான் சாட்சி அளிக்கின்றேன். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் எவனும் இல்லை. அவன் ஏகன் ஆவான். அவன் இணையற்றவன் ஆவான். மேலும் முஹம்மது (ஸல்) அவர்கள் அவனது அடியாரும், தூதரும் ஆவார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்கள் கொண்டு வந்துள்ள போதனையை நாங்கள் ஒப்புக் கொள்கின்றோம். எவர் அதனை நிராகரிக்கின்றாரோ நாம் அவரை நிராகரிப்பாளராக கருதுகின்றோம். அவருடன் ஜிஹாத் செய்கின்றோம்.

அதன் பிறகு ஒரு விஷயம் தெளிவாகி விட வேண்டும். அதாவது அல்லாஹ், முஹம்மது (ஸல்) அவர்களை தன் புறமிருந்து உண்மையை வழங்கி தனது படைப்பினத்தின் பக்கம் நற்செய்தி வழங்குபவராகவும், எச்சரிப்பவராகவும், அல்லாஹ்வின் பக்கம் அவனது கட்டளையால் அழைப்பவராகவும், ஒளியூட்டி விடக் கூடிய ஒரு சூரியனாகவும் அனுப்பியுள்ளான். ஏனென்றால் உயிருள்ளவர்களை எச்சரிக்கை செய்ய வேண்டும் என்பதற்காகவும், நிராகரிப்பாளர்கள் மீது உண்மையான கூற்று வெளிப்பட்டு விட வேண்டும் என்பதற்காகவும் அவ்வாறு செய்துள்ளான். எவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஒப்புக் கொண்டுள்ளாரோ அல்லாஹ் அவருக்கு உண்மையுடன் நேர்வழி வழங்கியுள்ளான். எவர் அன்னார் (ஸல்) அவர்களிடமிருந்து புறமுதுகு காட்டி விட்ட நபருடன் அவர் விரும்பியோ அல்லது நிர்பந்தத்திற்கு உள்ளாகியோ இஸ்லாத்திற்கு வந்து விடும் வரை அன்னார் (ஸல்) அவர்கள் போர் புரிந்துள்ளார்கள்.

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். அல்லாஹ்வின் கட்டளைகளை செயல்படுத்திய பிறகு அன்னார் (ஸல்) அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். சமுதாயத்திற்கு நன்மை செய்துள்ளார்கள். அன்னார் (ஸல்) மீது சுமத்தப்பட்ட பொறுப்புகளை அன்னார் முழுமை செய்து விட்டார்கள். அல்லாஹ் அன்னார் (ஸல்) மீதும், இஸ்லாமியர்கள் மீதும் தனது வேதத்தில் அந்தக் கூற்றை இறக்கியுள்ளான். மேலும் அந்த விஷயத்தை அவன் தெளிவாக எடுத்துரைத்து விட்டான்.

அல்லாஹ் கூறுகின்றான்:

وَمَا مُحَمَّدٌ اِلَّا رَسُوْلٌ ۚ قَدْ خَلَتْ مِنْ قَبْلِهِ الرُّسُلُ ؕ
اَفَاۡئِنْ مَّاتَ اَوْ قُتِلَ انْقَلَبْتُمْ عَلٰۤى اَعْقَابِكُمْ ؕ
وَمَنْ يَّنْقَلِبْ عَلٰى عَقِبَيْهِ فَلَنْ يَّضُرَّ اللّٰهَ شَيْـًٔا ؕ
وَسَيَجْزِى اللّٰهُ الشّٰكِرِيْنَ (3:145)

பின்னர் அன்னார் (ரலி) எழுதுகின்றார்கள்: எவர் முஹம்மது (ஸல்) அவர்களை வணங்கி வந்தாரோ அவர் அறிந்து கொள்ளட்டும். முஹம்மது (ஸல்) மரணித்து விட்டார். மேலும் எவர் இணையற்ற அல்லாஹ்வை, ஏக இறைவனை வணங்கி வந்தாரோ அவர் அறிந்து கொள்ளட்டும் அல்லாஹ் உயிருடன் இருக்கின்றான். அவன் என்றென்றும் நிலைத்திருக்கின்றான். அவன் இறப்பதில்லை. அவனுக்கு சிற்றுறக்கமும் வருவதில்லை. அவன் தனது பணிகளின் பாதுகாவலன் ஆவான். மேலும் தனது எதிரிகளை பழிவாங்குபவனும், அவர்களுக்கு தண்டனை வழங்கக் கூடியவனும் ஆவான்.

நான் உங்களுக்கு இறையச்சத்தை மேற்கொள்வதற்கும் அறிவுரை செய்கின்றேன். உங்களின் துர்பாக்கிய நிலையை எச்சரிக்கின்றேன். அல்லாஹ்விடத்தில் உங்களுக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள நற்பேறை பெறுவதற்காக அறிவுறுத்துகின்றேன். மேலும் உங்களிடத்தில் உங்களது நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்துள்ள போதனையின்படி அமல் செய்வதற்கு உங்களை வலியுறுத்துகின்றேன். மேலும் நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களிலிருந்து வழிகாட்டல்

## திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Sec. Waqf-e-Jadid, Melapalayam)

பெற்றுக் கொள்ளுங்கள். அல்லாஹ்வின் மார்க்கத்தை உறுதியுடன் பற்றிக் கொள்ளுங்கள். ஏனென்றால் அல்லாஹ் நேர்வழி வழங்காத ஒவ்வொரு நபரும் வழிகேடர் ஆவார். மேலும் அவன் பாதுகாக்காத ஒவ்வொரு நபரும் சோதனையில் வீழ்வார். மேலும் அவன் உதவி செய்யாத ஒவ்வொரு நபரும் ஆதரவற்றவரும், உதவியற்றவரும் ஆவார். எனவே அல்லாஹ் எவருக்கு நேர்வழி வழங்குவானோ அவரே நேர்வழி பெற்றவர் ஆவார். எவரை அவன் வழிகேடராக ஆக்கி விட்டானோ அவர் வழிகேடர் ஆவார்.

அடுத்து அல்லாஹ் கூறுகின்றான்:

مَنۡ يَّهۡدِ اللّٰهُ فَهُوَ الۡمُهۡتَدِ‌ۚ

وَمَنۡ يُّضۡلِلۡ فَلَنۡ تَجِدَ لَهٗ وَلِيًّا مُّرۡشِدًا (18:18)

பின்னர் தொடர்ந்து அன்னார் (ரலி) எழுதுகின்றார்கள்: (முர்தத் ஆன) அவர் இஸ்லாமிய மார்க்கத்தை ஒப்புக் கொள்ளாத வரை இந்த உலகத்தில் அவர் செய்த எந்தவொரு செயலும் ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது. மேலும் மறுமையிலும் அவர் புறமிருந்து எந்தவொரு பரிகாரமும் ஒப்புக் கொள்ளப்படாது. மேலும் உங்களில் சிலர் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட பிறகு அதன்படி அமல் செய்த பிறகு அல்லாஹ்வை ஏமாற்றியவாறு அவனது விவகாரங்களில் அறிவீனத்தை வெளிப்படுத்தி ஷைத்தானின் கூற்றை ஒப்புக் கொண்டவாறு உங்களது மார்க்கத்திலிருந்து விலகி விட்டதாக எனக்கு தகவல் வந்துள்ளது.

அல்லாஹ் கூறுகின்றான்:

وَاِذۡ قُلۡنَا لِلۡمَلٰٓـئِكَةِ اسۡجُدُوۡا لِاٰدَمَ فَسَجَدُوۡۤا اِلَّاۤ اِبۡلِيۡسَ ؕ

كَانَ مِنَ الۡجِنِّ فَفَسَقَ عَنۡ اَمۡرِ رَبِّهٖ‌ ؕ اَفَتَتَّخِذُوۡنَهٗ

وَذُرِّيَّتَهٗۤ اَوۡلِيَآءَ مِنۡ دُوۡنِىۡ وَهُمۡ لَـكُمۡ عَدُوٌّ‌ ؕ بِئۡسَ لِلظّٰلِمِيۡنَ بَدَلًا

பொருள்: நாம் மலக்குகளிடம் நீங்கள் ஆதமுடன் (இணைந்து) சிரம்பணியுங்கள் என்று கூறிய நேரத்தை (நினைத்துப் பார்ப்பீராக). இப்லீஸைத் தவிர அவர்கள் எல்லாரும் சிரம்பணிந்தனர். அவன் ஜின்களைச் சார்ந்தவனாக இருந்தான். இதனால் அவன் (தன் இயல்பிற்கேற்ப) தனது இறைவனின் கட்டளைக்கு மாறு செய்தான். ஆகவே (என் அடியார்களே!) நீங்கள் என்னை விட்டு விட்டு (ஷய்த்தானாகிய) அவனையும், அவனுடைய சந்ததிகளையும் (உங்கள்) நண்பராக்கிக் கொள்கின்றீர்களா? ஆனால் அவர்களோ உங்கள் விரோதிகளாவர். அநீதியிழைப்பவர்களுக்கு மிக மோசமான விளைவே. (அல்கஹ்ஃப்:51)

மேலும் அல்லாஹ் கூறுகின்றான்:

اِنَّ الشَّيۡطٰنَ لَـكُمۡ عَدُوٌّ فَاتَّخِذُوۡهُ عَدُوًّا‌ ؕ

اِنَّمَا يَدۡعُوۡا حِزۡبَهٗ لِيَكُوۡنُوۡا مِنۡ اَصۡحٰبِ السَّعِيۡرِ

பொருள்: நிச்சயமாக ஷைத்தான் உங்களுக்கு எதிரியாவான். எனவே நீங்கள் அவனை எதிரியாகவே கொள்ளுங்கள். தன் கூட்டத்தினரை, சுடர்விட்டெறியும் நெருப்பிற்குரியவர்களாவதற்கே அவன் அழைக்கின்றான். (அல்ஃபாதிர்:7)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த கடிதத்தைக் குறிப்பிடுகின்றார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதினார்கள்: நான் முஹாஜிர், அன்ஸார் சகோதரர்கள் மற்றும் அழகிய அமல்களை செய்யக் கூடிய தாபியீன்களின் படையில் இன்ன மனிதரை நியமித்து உங்களின் பக்கம் அனுப்புகின்றேன். அவர்கள் யாருடனும் போர் புரியக் கூடாது என்றும், அல்லாஹ்வின் தூதுச் செய்தியின் பக்கம் ஒருவர் அழைக்கப்படாத வரை கொலை செய்யக் கூடாது என்றும் நான் அவர்களுக்கு கட்டளை வழங்கியுள்ளேன். பின்னர் எவர் இந்த தூதுச் செய்தியை ஒப்புக் கொண்டு விடுவாரோ மேலும் அதனை ஏற்றுக் கொண்டு விலகி விடுவாரோ நற்செயல்கள் செய்வாரோ அவர் ஏற்றுக் கொள்ளப்படுவார். மேலும் அவருக்கு உதவி செய்யப்படும். மேலும் எவர் நிராகரித்து விட்டாரோ அவருடன் அந்த விஷயத்தில் போர் புரிய வேண்டும். மேலும் எவர் கட்டுப்படுத்தப்படுவாரோ அவர்களில் எவரும் எஞ்சியிருக்க செய்ய வேண்டாம். அவர்களை நெருப்பால் எரித்து விட வேண்டும். மேலும் எல்லா வழிமுறைகளிலும் அவர்களை கொலை செய்து விட வேண்டும். மேலும் பெண்களையும், பிள்ளைகளையும், குழந்தைகளையும் சிறைபிடித்து விட வேண்டும். மேலும் இஸ்லாத்தை தவிர வேறு எந்த ஒரு குறைவான விஷயத்தையும் எவரிடமிருந்தும் ஒப்புக் கொள்ள வேண்டாம் என்றும் நான் அவர்களுக்கு கட்டளை வழங்கியுள்ளேன். பின்னர் எவர் இதனை பின்பற்றுவாரோ அவருக்கு அது சிறந்ததாகும். எவர் இதனை புறக்கணித்து விட்டாரோ அவரால் அல்லாஹ்வை தோல்வியுறச் செய்ய முடியாது.

நான் எனது தூதுவருக்கு இந்தக் கட்டளையை வழங்கியுள்ளேன். அதாவது அவர் எனது இந்தக் கடிதத்தை உங்களது ஒவ்வொரு கூட்டத்திலும் படித்துக் காட்ட வேண்டும். எனவே முஸ்லிம்கள் பாங்கு கொடுக்கட்டும். அவர்களும் பாங்கு கொடுக்கட்டும். அவ்வாறு செய்தால் அவர்கள் மீது தாக்குதல் நிறுத்தப்படும். அவர்கள் பாங்கு கொடுக்காவிட்டால் அவர்கள் மீது விரைவாக தாக்குதல் தொடுங்கள். அவர்கள் பாங்கு கொடுத்து விட்டால் பின்னர் அவர்கள் மீது கடமையாக்கப்பட்ட விஷயங்களை வழங்கும்படி கூறுங்கள். அவர்கள் நிராகரித்து விட்டால் பின்னர் அவர்கள் மீது விரைவாக தாக்குதல் தொடுங்கள். அவர்கள் ஏற்றுக் கொண்டு விட்டால் அவர்களிடமிருந்து ஒப்புக் கொண்டு விடுங்கள்.

(சிர்ருல் கிலாஃபா, அரபி வாசகத்தின் உருது மொழியாக்கம், நஸாரத் இஷாஅத் பதிப்பு பக்கம் 190–194 அடிக்குறிப்பு)

எவ்வாறிருப்பினும் அவர்களுடன் ஏன் போர் நிகழ்ந்தது? ஏன் அவர்களுடன் இவ்வாறு நடந்து கொள்ளப்பட்டது? என்பதற்கு விளக்கம் உள்ளது. அவர்கள் போர் செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள். மேலும் அவர்கள் முஸ்லிம்கள் மீது போரை திணிப்பவர்களாக இருந்தார்கள். போர் புரிபவர்களாக மட்டும் இருக்கவில்லை. மாறாக, அநீதியும் செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள். மேலும் தங்களது பகுதியில் நிராயுதபாணியாக இருந்த முஸ்லிம்கள் மீது அவர்கள் அநீதியிழைத்து வந்தனர்.

இரண்டாவது கடிதம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், 11 நபர்களைக் கொண்ட படையின் அனைத்து அமீர்மார்களின் பெயரிலும் எழுதினார்கள். இதைப் பற்றி ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. அந்தக் கடிதம் படைகளின் தலைவர்களின் பெயரில் எழுதப்பட்டிருந்தது. அந்தக் கடிதம் கீழ்க்கண்டவாறு இருந்தது:

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ இறைத்தூதர் (ஸல்) அவர்களின் கலீஃபாவான அபூபக்ர் புறமிருந்து இந்தக் கடிதம் இன்ன நபருக்கு எழுதப்பட்டுள்ளது. அன்னார் அவரை முஸ்லிம்களின் படையுடன் முர்தத்களுடன் போரிடுவதற்காக அனுப்பி வைத்துள்ளார்கள். அதாவது அந்தப் படையின் அமீரின் பெயரால் அந்தக் கடிதம் எழுதப்பட்டிருந்தது. அன்னார் அந்த அமீருக்கு இந்த கட்டளையை வலியுறுத்தி எழுதியிருந்தார்கள். அதாவது அவர் எல்லா விவகாரங்களிலும் வெளிப்படையிலும், மறைவாகவும் இறையச்சத்தை மேற்கொள்ள வேண்டும். மேலும் அவருக்கு ஆற்றல் உள்ள வரை அவரால் முடிந்த வரை அல்லாஹ்வின் விவகாரங்களில் முயற்சி செய்ய வேண்டும். எவர்கள் அல்லாஹ்விடமிருந்து முகம் திருப்பி விட்டார்களோ, இஸ்லாத்திலிருந்து விலகி ஷைத்தானின் ஆசைகளை மேற்கொண்டு விட்டார்களோ அவர்களுடன் ஜிஹாத் செய்வதற்கு கட்டளை வழங்கப்பட்டுள்ளது. முதலில் அவர்கள் மீது சான்றுகளை முழுமை செய்ய வேண்டும். அவர்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் அழைப்பு கொடுக்க வேண்டும். அவர்கள் அதனை ஒப்புக் கொண்டு விட்டால் அவர்களுக்கெதிராக போர் புரிவதிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும். அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லையென்றால் அவர்கள் மீது உடனடியாக தாக்குதல் தொடுக்க வேண்டும். அவர்கள் சரணடைந்து விடும் வரை தாக்குதல் தொடுக்க வேண்டும்.

பின்னர் அவர்களின் உரிமைகள் மற்றும் கடமைகள் அவர்களுக்கு கூறப்பட வேண்டும். மேலும் அவர்களின் மீது கடமையானவற்றை அவர்களிடமிருந்து வசூல் செய்ய வேண்டும். மேலும் அவர்களுக்குரிய உரிமைகளை வழங்க வேண்டும். அந்த மக்களுக்கு காலக்கெடு கொடுக்க வேண்டாம். அதாவது போருக்கு தயாராகி முஸ்லிம்கள் மீது தாக்குதல் தொடுத்து விடும் அளவிற்கு காலக்கெடுவை கொடுக்க


**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Naib Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

வேண்டாம். அவர்கள் முஸ்லிம்களை அவர்களின் எதிரிகளுக்கெதிராக போரிடுவதிலிருந்து தடுக்க வேண்டாம். இந்த மக்கள் விலக மாட்டார்கள். மேலும் அவர்கள் போரிட விரும்புகிறார்கள் என்பதை முஸ்லிம்கள் புரிகின்றார்கள் என்றால் அவர்களை போரிலிருந்து தடுக்க வேண்டாம். அந்தப் பகுதியின் மக்களை நன்றாக அறிந்திருந்த அந்தத் தலைவர்களுக்கு இந்தக் கட்டளை வழங்கப்பட்டிருந்தது.

எனவே எவர் கம்பீரமிக்க அல்லாஹ்வின் கட்டளையை ஏற்றுக் கொண்டாரோ அதற்கு கட்டுப்பட்டாரோ அவருடைய இந்த விஷயத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். முறையான வழிகளில் அவருக்கு உதவி செய்யுங்கள். எவர் இதனை ஒப்புக் கொண்ட பிறகும் அதாவது அல்லாஹ்வின் புறமிருந்து வந்ததை ஒப்புக் கொண்ட பிறகும் அல்லாஹ்வை நிராகரித்து விட்டாரோ அவருடன் போர் செய்யப்பட வேண்டும். ஒருவேளை அவர் அந்த அழைப்பை ஒப்புக் கொண்டு விட்டால் பின்னர் அவர் மீது எந்த குற்றமும் இருக்காது. அவர் எதனை மறைத்தாரோ அது குறித்து பின்னர் அவரிடமிருந்து அல்லாஹ் கணக்கெடுப்பவனாக இருக்கின்றான். எவர் அல்லாஹ்வின் தூதுச் செய்தியை ஒப்புக் கொள்ளவில்லையோ அவருடன் போர் புரிய வேண்டும். அவர் கொல்லப்பட வேண்டும். அவர் எங்கிருந்தாலும், அவர் எவ்வளவு தான் செல்வந்தராக இருந்தாலும் சரியே. இஸ்லாத்தை தவிர அவர் கொடுக்கின்ற எந்தவொரு விஷயத்தையும் ஒப்புக் கொள்ளக் கூடாது. எனவே எவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு ஒப்புக் கொண்டு விட்டாரோ அவரிடமிருந்து அவர் கொடுப்பதை ஏற்றுக் கொள்ளலாம். அவருக்கு இஸ்லாமிய போதனைகள் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

மேலும் எவர் நிராகரித்து விட்டாரோ, மேலும் முஸ்லிமாக இருந்து கொண்டு முர்ததாகி விட்டாரோ அவருக்கு இஸ்லாத்தின் போதனைகளை கற்றுக் கொடுக்க வேண்டும். பின்னர் அவர்கள் சண்டையிடுகின்றார்கள் என்றால் இஸ்லாமிய போதனைகளுக்கெதிராக செயல்படுகின்றார்கள் என்றால், பிறகு அவர்களுக்கு இஸ்லாம் என்றால் என்ன? என்பதையும், உண்மை என்ன? என்பதையும் அவர்களுக்கு கூற வேண்டும். நீங்கள் முஸ்லிம் என்று வாதம் செய்த பிறகு அரசாங்கத்திற்கெதிராக போர் புரிய முடியாது. எவர் மறுத்து விட்டாரோ அவருடன் போர் செய்யப்பட வேண்டும். அல்லாஹ் அவர்கள் மீது வெற்றியை வழங்கினான். பின்னர் மிக மோசமாக ஆயுதம் மற்றும் நெருப்பின் மூலம் அவர்களை கொன்று விட வேண்டும். பின்னர் அல்லாஹ் அவர்களுக்கு வழங்குகின்ற போர் செல்வங்களில் கம்ஸ் என்ற பங்கைத் தவிர மற்றவற்றை பங்கிட வேண்டும். ஹம்ஸ் என்ற பங்கை எமக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

படைத்தளபதிகள் தமது தோழர்களை விரைவாக குழப்பங்களிலிருந்து தடுக்க வேண்டும். ஒருவரிடம் என்ன ஆற்றல் உள்ளது என்பதை அறிந்து கொள்ளாதவரை அந்நிய மனிதர் எவரையும் தம்முடன் இணைத்துக் கொள்ளக் கூடாது. ஏனென்றால் அவர் உளவாளியாக இருக்கக் கூடும். அதாவது உளவாளியான ஒருவரை உங்களது படையில் சேர்த்துக் கொள்ளக் கூடாது. (சரியான முறையில் ஆராய்ந்து விசாரித்து பின்னர் ஒருவரை படையில் சேர்க்க வேண்டும்). மேலும் அவர்கள் மூலமாக முஸ்லிம்களுக்கு ஏதும் துன்பம் வந்து விடக் கூடாது. பயணம் மற்றும் ஓரிடத்தில் தங்கும் நிலைகளில் முஸ்லிம்களுடன் மென்மையுடனும், நடுநிலையுடனும் நடந்து கொள்ள வேண்டும். அவர்களை நலம் விசாரித்து வர வேண்டும். படையின் ஒரு பகுதி மற்றொரு பகுதியை விட முந்துவதற்கு கட்டளை வழங்கக் கூடாது. முஸ்லிம்களுடனான பரிமாற்றத்திலும், உரையாடலிலும் நல்லொழுக்கத்தையும், மென்மையான குரலையும் மேற்கொள்ள வேண்டும்.

(தாரீக் தப்ரி தொகுதி 2 பக்கம் 258, 259 – 2012 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தற்போது சில விஷயங்கள் எப்படிப்பட்டவையாக உள்ளன என்றால் அதற்கு விளக்கமளிக்க வேண்டியதுள்ளது. ஆனால் விளக்கம் அளிக்கப்படவில்லை. இதன் காரணமாக சில முறை இஸ்லாத்தின் மீது தவறான தாக்கம் ஏற்படுகின்றது. அந்த அனைத்து முர்தத்களும் போர் புரிந்தவர்களாக மட்டும் இருக்கவில்லை. மாறாக தங்களின் பகுதியில் வசித்து வந்த முஸ்லிம்களின் மீது அவர்கள் அநீதியிழைத்தனர். அவர்களை கொலை செய்தனர். அவர்களை எரித்து விட்டனர் என்ற விளக்கத்தை நான் கடந்த குத்பாவில் வழங்கி விட்டேன். அந்த முர்தத்கள் முஸ்லிம்களின் வீடுகளை எரித்தார்கள். முஸ்லிம்களையும் எரித்து விட்டார்கள். எனவே அவர்களுக்கெதிராக நிச்சயமாக பழிவாங்க வேண்டும் என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அவர்கள் செய்த அதே வழிமுறையின் மூலம் அவர்கள் பழிவாங்கப்பட வேண்டும் என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அந்தக் கடிதத்தைப் பற்றி சுட்டிக்காட்டியிருப்பதைப் போன்று முர்தத்கள் மேற்கொண்ட வழிமுறையிலேயே அவர்களுக்கும் தண்டனை வழங்கப்படும் என்ற பொருளில் அன்னார் (ரலி) குறிப்பிட்டிருந்தார்கள். ஏனென்றால் பழிவாங்குதல் தொடர்பாக திருக்குர்ஆனும், அல்லாஹ்வும் இதே கட்டளையைத் தான் வழங்கியுள்ளான். ஒருவர் எவ்வாறு செய்வாரோ அதுபோன்றே அவருக்கு தண்டனை கொடுங்கள் என்பது கட்டளையாகும்.

ஆனால் மற்றோரிடத்தில் அதே நூலாசிரியர் டாக்டர் அலி முஹம்மது ஸலாபி சாஹிப் இந்த விஷயத்தை விளக்கியவாறு இவ்வாறும் எழுதியுள்ளார். அதாவது முர்தத்கள் மற்றும் கிளர்ச்சியாளர்கள் நெருப்பில் எரிக்கப்பட வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் எவருக்கும் நெருப்பால் தண்டனை கொடுப்பது ஆகுமானதல்ல என்றும் அவர் எழுதியுள்ளார்.

إِنَّ النَّارَ لَا يُعَذِّبُ بِهَا إِلَّا اللهُ

நெருப்பின் மூலமாக தண்டனை கொடுப்பது அல்லாஹ்வின் பணி மட்டுமே ஆகும் என்பது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டல் ஆகும். ஆனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இங்கு நெருப்பால் எரிப்பதற்கு ஏன் கட்டளை வழங்கியுள்ளார்கள் என்றால் அந்த தீயவர்கள் ஈமான் கொண்டவர்களுடன் அவ்வாறே நடந்து கொண்டனர். எனவே கஸாஸ் எனும் பழிவாங்கும் நடவடிக்கையாக அது அமைந்திருந்தது.

(ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) ஷக்ஸியத் அவ்ர் கார்நாமே என்ற நூல் பக்கம் 293)

அதே நூலில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் அதே கடிதத்தைக் குறிப்பிட்டவாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வாறும் எழுதப்பட்டுள்ளது: அதாவது எவர் முஸ்லிம்களின் அணியின் பக்கம் திரும்புவதற்கு நிராகரித்து விட்டாரோ மேலும் மார்க்க புறக்கணிப்பில் நிலைபெற்று விட்டாரோ அவர் போரிடுபவர்களை சார்ந்தவராக இருக்கின்றார். எனவே அவர் மீது தாக்குதல் நடத்துவது அவசியமாகும். ஆகவே அவரை கொலை செய்து விட வேண்டும் அல்லது எரித்து விட வேண்டும்.

(ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) ஷக்ஸியத் அவ்ர் கார்நாமே என்ற நூல் பக்கம் 294, 295)

அல்லாஹ் திருக்குர்ஆனிலும் இவ்வாறே கூறியுள்ளான்: உங்களுக்கு கஷ்டம் தரப்படும்போது அவர்கள் எவ்வாறு உம்முடன் நடந்து கொண்டார்களோ அதேபோன்றே தண்டனை கொடுங்கள். ஏற்கனவே நான் கடந்த குத்பாவிலும் தற்போதும் கூறியிருந்ததைப் போன்று கிளர்ச்சியாளர்கள் முஸ்லிம்களை எரிப்பதற்கும் அவர்களை பயங்கரமான வழிமுறையில் கொலை செய்கின்றன குற்றத்திற்கும் ஆளாகி இருந்தார்கள். அந்த முஸ்லிம்களை நெருப்பில் போட்டு எரித்தனர். அவர்களின் வீடுகளை எரித்தனர். அவர்களின் பிள்ளைகளையும், மனைவிகளையும், அனைவரையும் எரித்தனர். அவர்களின் உடல்களை சிதைத்தனர். எனவே எவர் குற்றங்களில் ஈடுபட்டிருந்தாரோ மேலும் முஸ்லிம்களுடன் எவர் அவ்வாறு நடந்து கொண்டிருந்தாரோ அதேபோன்று அவருடன் நடந்து கொள்ளப்பட வேண்டும் என்ற அடிப்படையில் அவர்களை கொலை செய்வதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கட்டளை வழங்கி இருந்தார்கள்.


எவ்வாறிருப்பினும் இந்த நற்குறிப்பு எதிர்காலத்திலும் எடுத்துரைக்கப்படும். இன்ஷா அல்லாஹ். ரமலானில் ஏனைய குத்பாக்களும் இடையில் வந்து கொண்டிருக்கும். காலம் ஆகி விடுவதற்கும் வாய்ப்பு உள்ளது. ஆனால் எவ்வாறிருப்பினும் எதிர்காலத்தில் இது தொடர்பான குத்பாவில் இந்த குறிப்பும் இதன் விளக்கமும் எடுத்துரைக்கப்படும்.

(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)

......☆......☆......☆......

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

*(மல்ஃபூஸாத்...முதல் பக்க தொடர்ச்சி)*

அவனது ஆன்மா முழுமையான உத்வேகத்துடனும், வேதனையுடனும் நிம்மதியிழந்து இறை சந்நிதானத்தில் விழுந்து மன்றாடி, எனது இறைவா! எனது இறைவா! என்று அழைக்கிறது.

திருக்குர்ஆனை சீர்தூக்கிப் பாருங்கள். அப்போது உங்களுக்கு இந்த விஷயம் தெரிய வரும். முதலாவது அதிகாரத்திலேயே அல்லாஹ் துஆவிற்கான போதனையை இவ்வாறு நல்கியுள்ளான்.

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ صِرَاطَ الَّذِيۡنَ اَنۡعَمۡتَ
عَلَيۡهِمۡ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ

ஒது துஆ அனைத்து பயன்களையும், நன்மைகளையும் தன்னுள் கொண்டிருக்கும்போதும், அனைத்து பாதிப்புகளிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் பாதுகாக்கும்போதுதான் அந்த துஆ முழுமையான துஆவாக இருக்க முடியும். எனவே ஒரு துஆவில் எந்த அளவிற்கு சிறந்த பயன்கள் இருக்க முடியுமோ மேலும் எவையெல்லாம் சாத்தியமோ அவையெல்லாம் இந்த துஆவில் வேண்டப்பட்டுள்ளது. மேலும் இது பெரும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தும் விஷயங்களிலிருந்து அதாவது மனிதனை அழித்து விடக் கூடிய விஷயங்களிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கான துஆவாகும். நான் மீண்டும் மீண்டும் கூறி விட்டேன். அருட்கொடைப் பெற்ற கூட்டத்தினர் நான்கு வகையான மக்கள் ஆவர். (1) நபி (2) சித்தீக் (3) ஷஹீத் (4) சாலிஹீன். எனவே இந்த துஆவில் அந்த நான்கு கூட்டத்தினரின் சிறப்புகளை பெறுவதற்கான வேண்டுதல் இடம் பெற்றுள்ளது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 372 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

......☆......☆......☆......

*(தஃப்ஸீர் கபீர் தொடர்ச்சி...)*

நீங்கள் உண்மையை விட்டு விட்டு ஏன் கருத்து வேறுபாடு கொண்டுள்ளீர்கள்? நீங்கள் கருத்து வேறுபாடு கொள்ளாமல் இருந்திருந்தால் பின்னர் நிச்சயமாக நபியின் அவசியம் இருந்திருக்காது. ஆனால் நீங்களோ நோயை உருவாக்கி விட்டீர்கள். இறைவன் புறமிருந்து எந்தவொரு கருத்து வேறுபாட்டையும் நீக்கக் கூடிய ஒருவரின் வருகைக்கு அவசியம் இல்லை என்று தற்போது கூறுகின்றீர்கள்.

மேற்குறிப்பிட்ட கருத்தில் இந்த கேள்வி எழுப்பப்படக் கூடும். மக்கள் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் ஷரீஅத்தின்படியே அமல் செய்து வந்தார்கள். மேலும் அவர்கள் கருத்து வேறுபாடு கொள்ளவில்லை என்று ஒரு வாதத்திற்கு வைத்துக் கொள்வோம். அப்படியென்றால், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மூலமாக முழுமையான ஷரீஅத் அல்லது முழுமையான போதனை வந்திருக்காதா? இதற்குரிய பதில் என்னவென்றால், இது கற்பனையான கூற்று ஆகும். உண்மையில் கருத்து வேறுபாடு கொள்வதிலிருந்து மக்களும் விலகி இருக்க மாட்டார்கள். மேலும் இந்த போதனை வருவதில் எந்தவொரு தடையும் உருவாகியிருக்க முடியாது.

அதுபோன்ற ஒரு நிலை இருந்திருந்தால் பின்னர் அல்லாஹ் அதற்கு இவ்வாறு பதில் வழங்கியுள்ளான்.

لَوۡ كَانَ فِي الۡاَرۡضِ مَلٰٓئِكَةٌ يَّمۡشُوۡنَ مُطۡمَئِنِّيۡنَ لَنَزَّلۡنَا
عَلَيۡهِمۡ مِّنَ السَّمَآءِ مَلَكًا رَّسُوۡلًا (17:11)

உலகில் அனைவருமே வானவர்களாக இருந்திருந்தால் அதாவது அனைத்து மனிதர்களும் நல்லவராக இருந்திருந்தால் அப்போது நாம் அவர்களில் ஒவ்வொரு நபரின் மீதும் எமது வேதத்தை இறக்கி இருப்போம். அதாவது அந்த நிலையில் சமுதாயத்தின் பக்கம் ஒரு நபி அனுப்பப்பட்டிருக்க மாட்டார். மாறாக, அனைவருமே நபியாக இருந்திருப்பார்கள். மேலும் மறுப்பு மற்றும் நிராகரிப்பிற்கான கேள்வியே உருவாகி இருக்காது. ஆனால் உலகில் அனைவருமே நல்ல நபியாக இல்லை. இறைவனும் நபிமார்களின் தொடரை நிறுத்தியிருக்கவில்லை.

هُدًى وَّرَحۡمَةً لِّقَوۡمٍ يُّؤۡمِنُوۡنَ என்ற கருத்தில் மற்றொரு அம்சமும் எடுக்கப்பட்டுள்ளது. அதாவது திருக்குர்ஆனின் அடிப்படையில் அவர்களின் ஆட்சேபனைகள் அகற்றப்பட வேண்டும். மேலும் நம்பிக்கையாளர்கள் அவர்களின் முன்னேற்றத்திற்கான படித்தரங்கள் மற்றும் கருணையை பெறுவதற்கான வழிமுறையாக இந்தத் திருக்குர்ஆனை ஆக்க வேண்டும் என்பதே அதன் அடிப்படையாகும்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 4 பக்கம் 189 – 2010 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

*(ஹுஸூர் அவர்களின் ஜெர்மனி சுற்றுப்பயணம்... 12 ஆம் பக்க தொடர்ச்சி...)*

இன்சார்ஜ்) தமது காதிம்களின் பாதுகாப்பு குழுவினருடன் தமது அன்பிற்குரிய எஜமானரை வரவேற்று நல்வரவு கூறினார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், அவர்கள் அனைவருக்கும் கை குலுக்கும் கண்ணியத்தை வழங்கினார்கள். மேலும் ஜெர்மனி அமீர் சாஹிபுடன் உரையாடினார்கள்.

அதன் பிறகு அந்த Restaurent ன் ஒரு பகுதியில் தொழுகைக்காக பெறப்பட்ட இடத்தில் 4:35 மணியளவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் லுஹர் மற்றும் அஸர் தொழுகையை ஜமு செய்து தொழ வைத்தார்கள். உணவு உண்ட பிறகு 5:30 மணியளவில் அங்கிருந்து பிரான்க்ஃபர்ட் (ஜெர்மனி)க்கு பயணக் குழு புறப்பட்டது. பெல்ஜியம் நாட்டில் 189 கி.மீ பயணம் செய்த பிறகு ஜெர்மனியின் எல்லையில் பயணக் குழு நுழைந்தது. ஜெர்மனியினுள் மேலும் 285 கி.மீ பயணம் செய்த பிறகு சுமார் 8:45 மணியளவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பிரான்க்ஃபர்ட்டிலுள்ள ஜமாஅத்தின் தலைமையகமான பைத்துஸ் ஸுபூஹ்வில் வந்திறங்கினார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வண்டியிலிருந்து வெளியே வருகை தந்தவுடன் பிரான்க்ஃபர்ட் மற்றும் பல்வேறு நகரங்களின் ஜமாஅத்துகளிலிருந்து வருகை தந்திருந்த ஜமாஅத் உறுப்பினர்கள் ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர் தமது அன்பிற்குரிய எஜமானரை பெரும் உத்வேகத்துடன் வரவேற்றார்கள். சிறுவர்களும், சிறுமியர்களும் ஒரே வடிவிலான ஆடையில் பல்வேறு குழுக்களின் வடிவில் துஆக்களைக் கொண்ட கவிதைகளையும், வரவேற்பு பாடல்களையும் பாடினார்கள். பற்றுடனும், நேசத்துடனும் எல்லா புறமும் கரங்கள் உயர்த்தப்பட்டன. அஹ்லன் வ ஸஹ்லன் மர்ஹபா என்ற குரல்கள் ஒலித்துக் கொண்டிருந்தன. ஜமாஅத் சகோதரர்கள் உணர்ச்சிமிக்க முழக்கங்களையும் முழங்கிக் கொண்டிருந்தார்கள்.

மதிப்பிற்குரிய ஜெர்மனி ஜமாஅத்தின் துணை அமீர் மற்றும் ஜமாஅத்தின் முபல்லிக் முபாரக் அஹ்மது தன்வீர் சாஹிப் மற்றும் உள்ளூர் அமீர் இத்ரீஸ் சாஹிப் ஆகியோர் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை வரவேற்றவாறு கை குலுக்குவதற்கான நற்பேறு பெற்றார்கள். பைத்துஸ் சுபூஹ்வின் அந்த வெளி வளாகம் துஆக்களைக் கொண்ட கவிதைகளாலும், வரவேற்பு வார்த்தைகளாலும், தக்பீர் முழக்கங்களாலும் அதிர்ந்து கொண்டிருந்தது.

தமது அன்பிற்குரிய எஜமானரை வரவேற்கக் கூடிய அந்த ஜமாஅத் உறுப்பினர்கள் பிரான்க்ஃபர்ட் நகரத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து மட்டுமின்றி Bornheim, Eschersheim, Ginnheim, Goldstein, Griesheim, Nied, Hochst, Bad homburg, Offerbach, Darmstadt, Friedberg, Gross Gerau, Riedstadt, Wiesbaden மற்றும் Niederhausen போன்ற ஜமாஅத்துகளிலிருந்தும் வருகை தந்திருந்தார்கள்.

அது மட்டுமின்றி Gieben ஜமாஅத்திலிருந்து ஜமாஅத் உறுப்பினர்கள் 100 கி.மீ தொலைவிலிருந்தும், Dusseldorf என்ற இடத்திலிருந்து வரக் கூடிய உறுப்பினர்கள் 230 கி.மீ தொலைவிலிருந்தும், Bielefel என்ற இடத்திலிருந்து வரக் கூடிய உறுப்பினர்கள் 330 கி.மீ தொலைவிலிருந்தும், Hamburg என்ற இடத்திலிருந்து வரக் கூடிய உறுப்பினர்கள் 500 கி.மீ தொலைவிலிருந்தும், Berlin என்ற இடத்திலிருந்து வரக் கூடிய உறுப்பினர்கள் 500 கி.மீ தொலைவிலிருந்தும் தமது அன்பிற்கு எஜமானரை வரவேற்பதற்காகவும் வருகை தந்திருந்தார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது கரத்தை உயர்த்தி அனைவருக்கும் 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்று கூறினார்கள். தமது இரு புறமும் நின்று கொண்டிருந்த நேசமிக்க ஜமாஅத் உறுப்பினர்களுக்கு மத்தியில் கடந்து சென்றவாறு தமது இருப்பிடத்தை சென்றடைந்தார்கள்.

ஜெர்மனியில் இன்றைய நாட்களில் அநேகமாக சூரிய மறைவு 9:40 மணிக்கு அமைந்துள்ளது. நிகழ்ச்சி நிரலுக்கேற்ப 9:50 மணியளவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வருகை தந்து மக்ரிப் மற்றும் இஷா தொழுகையை ஜமு செய்து தொழ வைத்தார்கள். தொழுகைகளை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது தங்குமிடத்தின் பகுதிக்கு சென்று விட்டார்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை வரவேற்பதற்காக ஜெர்மனியின் பல்வேறு ஜமாஅத்துகளிலிருந்து வருகை தந்திருந்த ஜமாஅத் சகோதரர்களான ஆண்கள், பெண்கள் ஆகியோரின் எண்ணிக்கை சுமார்

ஆயிரம் இருக்கும். அவர்கள் அனைவருக்கும் தமது அன்பிற்குரிய எஜமானருக்குப் பின்னால் நின்று மக்ரிப், இஷா தொழுவதற்கு நற்பேறு கிடைத்தது. அவர்களில் சிலர் எப்படிட்டவர்களாக இருந்தார்கள் என்றால் அவர்கள் கடந்த சில மாதங்களுக்கு முன்னால் தான் பாகிஸ்தானிலிருந்து வந்தடைந்திருந்தார்கள். அவர்களின் வாழ்க்கையில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுக்குப் பின்னால் நின்று தொழக் கூடிய முதல் தொழுகையாக அது இருந்தது. அவர்கள் அனைவரும் இந்த நற்பேறு கிடைத்ததை எண்ணி எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தார்கள். மேலும் நன்றி சஜ்தாக்களை செய்து கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு ஒரு புதிய வாழ்க்கையை வழங்கிக் கொண்டிருந்த அந்த அருளுக்குரிய தருணங்களிலிருந்து பயன் பெற்றுக் கொண்டிருந்தார்கள். அவர்களின் பல்லாண்டு கால ஏக்கமும், தாகமும் தமது அன்பிற்குரிய எஜமானரை சந்தித்ததன் மூலம் தணிந்தது. அந்தத் தருணங்கள் அவர்களின் வாழ்க்கையில் முதல் முறையாக வந்திருந்தன. அல்லாஹ் இந்த நற்பேறை நம் அனைவருக்காகவும் அருளுக்குரியதாக ஆக்குவானாக.

**23 ஜூன் 2013 (ஞாயிற்றுக்கிழமை)**

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் காலை 4:15 மணியளவில் பைத்துஸ் சுபூஹ்விற்கு வருகை தந்து ஃபஜர் தொழுகையை நடத்தினார்கள். தொழுகையை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தமது தங்குமிடத்திற்கு திரும்பிச் சென்று விட்டார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் காலையில் அலுவலக கடிதங்கள், தபால்கள் மற்றும் அறிக்கைகளை படித்தார்கள். மேலும் உரிய வழிகாட்டல்களை வழங்கினார்கள்.

**வாகிஃபாத்தே நவ் சிறுமியர்களுக்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வகுப்பு நடத்தினார்கள்**

இன்றைய நாள் வாக்கிஃபாத்தே நவ் சிறுமியர்கள் மற்றும் வாக்கிஃபே நவ் பிள்ளைகளுக்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடனான வகுப்புகளுக்கான நிகழ்ச்சி இருந்தது. அந்த வகுப்பிற்கான ஏற்பாடு பள்ளிவாசலின் ஆண்கள் அறையுடன் இணைந்துள்ள ஹாலில் வைத்து செய்யப்பட்டது.

11:25 மணியளவில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வாக்கிஃபாத்தே நவ் பிள்ளைகளின் வகுப்பிற்காக வருகை தந்தார்கள். திருக்குர்ஆன் திலாவத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. அதனை அன்பிற்குரிய அஸீஸா சமீனா ஓதினார். மேலும் அதன் உருது மொழியாக்கத்தை மதீஹா இக்பால் சாஹிபா வழங்கினார்.

அதன் பிறகு அனீலா அஹ்மது சாஹிபா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய நபிமொழியின் வாசகங்களை அரபியில் எடுத்துரைத்தார்கள். அந்த ஹதீஸின் கீழ்க்கண்ட மொழியாக்கத்தை அன்பிற்குரிய உமைரா ஸதஃப் அஹ்மத் சாஹிபா எடுத்துரைத்தார்.

ஹஸ்ரத் சஹல் பின் சஅத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: இறைவன் மீது ஆணையாக! உம் மூலமாக ஒரு நபர் நேர்வழி பெறுவது உயர்தரமான சிவப்பு ஒட்டகங்கள் கிடைத்து விடுவதை விட சிறந்ததாகும்.

(முஸ்லிம், கிதாபுல் ஃபஸாயில், பாடம்: அலி பின் அபீ தாலிப் அவர்களின் சிறப்புகள்)

இதன் பிறகு அன்பிற்குரிய ஷாஸியா அனீஸ் சாஹிபா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கீழ்க்கண்ட மேற்கோள்களை எடுத்துரைத்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபிகளின் முன்னுதாரத்தை பார்க்க வேண்டும். ஹஸ்ரத் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ஒருவரை தப்லீக்கிற்காக அனுப்பி வைத்தால் அந்த நபர் கட்டளை கிடைத்த உடனேயே சென்று விடுவார். பயண செலவை கூட கேட்க மாட்டார். குடும்பத்தினரின் வறுமை என்ற பொய்க் காரணத்தையும் கூற மாட்டார். எவர் தமது வாழ்க்கையை மார்க்கத்திற்காக அர்ப்பணித்து வைத்திருப்பாரோ அத்தகைய நபரால் மட்டுமே இது சாத்தியமாகும். இறையச்சமுடையவருக்கு இறைவன் தானே உதவி செய்கின்றான். இறைவனுக்காக அவர் கசப்பான வாழ்க்கையை தேர்ந்தெடுத்துக் கொள்கின்றார். எவர் முற்றிலும் மார்க்கத்திற்காக தம்மை ஆக்கிக் கொள்கின்றாரோ அவரை இறைவன் நேசிக்கின்றான். எனவே தப்லீக் பணிக்காக தம்மைத்தாமே அர்ப்பணித்துக் கொள்கின்ற சில நபர்களை நாம் தேர்தெடுக்க விரும்புகின்றோம். அதைத் தவிர்த்து வேறு எந்த விஷயமும் அவரது நோக்கமாக இருக்கக் கூடாது. அவர் எல்லா விதமான கஷ்டங்களையும் சகித்துக் கொள்ள வேண்டும். எல்லா இடத்திற்கும் செல்லுங்கள். இறைவனின் செய்தியை எட்ட வையுங்கள். பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையை பேணக் கூடியவராக அந்த நபர் இருக்க வேண்டும். அவர்களின் இயல்பில் வேகம் இருக்கக் கூடாது. எல்லா வகையான கடும் சொற்கள் மற்றும் ஏச்சுப் பேச்சுக்களையும் கேட்டு விட்டு மென்மையுடன் பதில் கொடுப்பதற்கு ஆற்றல் பெற்றவராக அவர் இருக்க வேண்டும்.

இதன் பிறகு அன்பிற்குரிய அரூஸா சமர் நாகி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூய கவிதை வரிகளை அழகிய குரலில் பாடிக் காட்டினார்.

அதன் பிறகு தப்லீக் மற்றும் தஃவத்தே இலல்லாஹ் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) மற்றும் அஹ்மதிய்யா கலீஃபாக்களின் வழிகாட்டல்களின் அடிப்படையில் பல்வேறு தலைப்புகளில் பல்வேறு கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டன. முதன் முதலில் அன்பிற்குரிய தூபா அஹ்மத் என்பவர் 'தப்லீக்கின் முக்கியத்துவம் மற்றும் அவசியம்' என்ற தலைப்பில் தனது கீழ்க்கண்ட இந்தக் கட்டுரையை எடுத்துரைத்தார்.

**தப்லீக்கின் அவசியமும் முக்கியத்துவமும்**

உண்மையில் தப்லீக் என்பது மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதன் பெயராகும். ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஐரோப்பா என்ன; ஆசியா என்ன; பூமியில் பல்வேறு இடங்களில் வசிக்கக் கூடிய அனைத்து ஆன்மாக்களையும் மேலும் நல்லுள்ளம் படைத்த அனைத்து மக்களையும் ஏகத்துவத்தின் பக்கம் ஈர்ப்பதற்கும், தமது அடியார்களை ஒரே மார்க்கத்தில் ஒன்றுகூட்டவும் இறைவன் விரும்புகின்றான். நான் உலகத்தில் அனுப்பப்பட்டதற்கான இறைவனின் நோக்கமும் இதுவே ஆகும். எனவே நீங்கள் அந்த நோக்கத்தை பின்பற்றுங்கள். ஆயினும் மென்மையுடனும், நல்லொழுக்கத்துடனும் துஆக்களின் மீது அழுத்தம் கொடுத்தவாறும் (அந்த நோக்கத்தை) முழுமை செய்ய வேண்டும்.

(ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 306, 307)

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் தப்லீக்கின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்பது கடமையாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: நீர் தப்லீக் செய்யவில்லையென்றால் உமது நபித்துவத்தையே வீணடித்து விட்டீர் என்று பொருள்படும். இந்த அளவிற்கு தீவிரத்துடன் இறைவன் கட்டளை வழங்கியுள்ளான். உமது சமுதாயமும் பதிலளிக்க வேண்டும். நம்மில் ஒவ்வொருவரும் பதிலளிக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழராக ஆக வேண்டுமென்றால், பின்னர் இறைவன் பால் மக்களை அழைப்பது ஒவ்வொரு நபரின் மீதும் கடமையாகும். ஏனென்றால் எவர் இறைவனின் வழியில் பயிரிடுவாரோ பின்னர் அதனை சுயமே பராமரிப்பாரோ எந்த அளவிற்கென்றால் அந்த நிலம் ஆற்றல் பெற்று விடும் வரை பணி செய்கின்றாரோ அத்தகைய நபரே இறைத்தூதர் (ஸல்) அவர்களின் தோழராக கணக்கிடப்படுவார். எனவே தஃவத்தே இலல்லாஹ் செய்யக் கூடிய ஒவ்வொரு அஹ்மதியைப் பற்றியும் அல்லாஹ்வின் வேதத்தில் அவரது குறிப்பு இடம் பெற்றுள்ளது. எனவே இறைவனால் எடுத்துரைக்கப்பட்ட பொருளின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழராக நீங்கள் ஆகவேண்டுமென்றால் பின்னர் நிச்சயமாக இறைவழியில் பயிரிட வேண்டும். புதிய புதிய ஆன்மீக இருப்புகளை உருவாக்க வேண்டும். அது ஒன்றும் கடினமான பணி அல்ல. எவர் தூய்மையுடன் அந்தப் பணியை செய்வாரோ அவருக்கான நற்கூலி நிச்சயம் கிடைக்கின்றது. (நவம்பர் 1987)

மேலும் கூறினார்கள்: இறைவன் பால் மக்களை அழைக்கின்ற ஒருவர் தூய்மையுடன் அல்லாஹ்வின் மீதான நேசத்தால் பணி செய்யத் தொடங்கினால் அவன் மீது முழுமையான நம்பிக்கை வைத்து பணியைத் தொடங்கினால் சில சமயம் இறைவன் அவருக்கு எப்படிப்பட்ட ஆச்சரியம் கொள்ளத்தக்க வகையில் வழிகாட்டுகின்றான் என்றால் அந்த சான்று அவரது அறிவில் எவ்வாறு வந்தது? மேலும் எவ்வாறு இறைவன் அவருக்கு மகத்துவமிக்க வெற்றியை வழங்கினான்? என்பது கூட அவருக்கு தெரியவதில்லை.

(28 ஆகஸ்ட் 1987)

தொடர்ந்து அன்னார் கூறுகின்றார்கள்: உங்களது தொழில் என்னவாக இருந்தாலும், உங்களுக்கு என்ன வேலையாக இருந்தாலும் உலகத்தின் எந்த மூலையில் வசித்து வந்தாலும், எந்த சமுதாயத்தைச் சார்ந்தவராக நீங்கள் இருந்தாலும் உங்களது தலையாய கடமை என்னவென்றால், உலகத்தை ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் இறைவனின் பக்கம் அழைக்க வேண்டும். மேலும் அந்த மக்களின் இருள்களை ஒளியால் மாற்றி விட வேண்டும். மேலும் அவர்களின் மரணத்திற்கு வாழ்வளிக்க வேண்டும். அவ்வாறே நடப்பதற்கு அல்லாஹ் அருள் செய்வானாக.

(குத்பா ஜுமுஆ 25 பிப்ரவரி 1983)

**தஃவத்தே இலல்லாஹ் மற்றும் நமது பொறுப்புகள்**

அதன் பிறகு அன்பிற்குரிய நபீலா நுஸ்ரத் தஃவத்தே இலல்லாஹ் மற்றும் நமது பொறுப்புகள் என்ற தலைப்பில் கீழ்க் கண்ட தனது கட்டுரையை எடுத்து வைத்தார்.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த விஷயத்தை கவனத்தில் கொள்ளுங்கள். தஃவத்தே இலல்லாஹ்வாக இருக்கட்டும் அல்லது தப்லீக்காக இருக்கட்டும். உங்களின் செயல்களின் பக்கம் பார்வையை வையுங்கள். நற்செயல்களை மேற்கொள்ளுங்கள். அல்லாஹ்விற்குரிய உரிமைகள் மற்றும் அடியார்களுக்குரிய உரிமைகளில் அல்லாஹ்வின் கட்டளைகளை முழுமையாக பின்பற்றுங்கள். உங்களது ஆற்றல்கள் மற்றும் திறமைகளுக்கேற்ப அந்த உரிமைகளை செலுத்திடுங்கள். ஏனென்றால் தத்தமது செயல்களின் மீது பார்வை வைத்தவாறு அதனை இறைவனின் போதனைக்கேற்ப ஆக்கிக் கொள்ளாதவரை தப்லீக் வெற்றி பெற முடியாது.

(குத்பா ஜுமுஆ அமெரிக்கா 2013)

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதன் நோக்கமும் ஒரு வகை ஜிஹாத் ஆகும். அதன் பக்கமும் நாம் கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ்வின் உதவியின்றி நம்மால் வெற்றி பெற முடியாது. அல்லாஹ்வின் அருள், அவனது இறைவணக்கத்திற்குரிய உரிமைகளை வழங்குவதன் மூலம் கிடைக்கின்றது. எனவே உங்களது தொழுகைகளை பாதுகாத்துக் கொள்ளுங்கள். அவ்வாறு செய்தால் இறைவனது அருளை பெறக் கூடியவர்களாக நாம் ஆகி விடுவோம். மேலும் நஃப்ஸிற்கு எதிரான அந்த ஜிஹாதிலும் பங்கு பெறக் கூடியவர்களாகவும், இறைவனின் தூதுச் செய்தியை எட்ட வைக்கின்ற அந்த ஜிஹாதிலும் பங்கு பெறக் கூடியவர்களாக நாம் ஆகி விடுவோம்.

(ஜுமுஆ பேருரை ஸ்பெயின் – 2013)

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்: இஸ்லாத்தின் மீது எல்லா திசைகளிலிருந்தும் தாக்குதல் தொடுக்கப்படுகின்றன. இஸ்லாத்திற்கு எதிராக ஏராளமான விஷயங்கள் கூறப்படுகின்றன., எழுதப்படுகின்றன. இந்த நிலையில் இஸ்லாத்தின் பாதுகாப்பிற்காக நீங்கள் எழுந்து நிற்க வேண்டும். நீங்கள் வசிக்கின்ற இந்த மேற்கத்திய சமூகத்தில் உங்களை கலங்கரை விளக்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். அதில் உலகப் பேராசை, உலக விளையாட்டுகள் மற்றும் கேளிக்கைகளுக்கான எந்த பகுதியும் இருக்கக் கூடாது. மாறாக, உண்மையில் உங்களை நீங்களே ஆன்மீக ஒளியால் ஒளி வழங்கும் விளக்காக ஆக்கிக் கொள்ளுங்கள்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அந்த ஒளி உங்களின் அனைவரின் வாழ்க்கையிலும் உருவாகி விட வேண்டும் என்று நான் துஆ செய்கின்றேன். மேலும் உங்களுக்கு அதில் வெற்றி கிடைத்து விட்டால் அல்லாஹ் உங்களை எனது மற்றும் எனக்குப் பிறகு வரக் கூடிய கலீஃபாக்களின் கவலைகளை அகற்றக் கூடியவர்களாக ஆக்கி விடுவான். இன்ஷா அல்லாஹ்.

(யூ.கே இஜ்திமா 2011 சந்தர்ப்பத்தில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு)

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் தஃவத்தே இலல்லாஹ்வின் சிறப்புகளை எடுத்துரைத்தவாறு இவ்வாறு கூறினார்கள்:

எனவே எவரெல்லாம் இறைவன் பால் மக்களை அழைப்பவராக ஆகி விடுவாரோ அவர் மீது இது கடமையாகி விடும். அதாவது அவர் முதலில் இறைவனை பெற்றுக் கொள்ள வேண்டும். அவனுடன் தனிப்பட்ட தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல் பத்திரிகை – ஜூலை 5, 12 – 2013)

(தொடரும்...)

## 127 வது காதியான் ஆண்டு மாநாடு 23, 24, 25 டிசம்பர் 2022 ல் நடைபெறும்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூமனீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 127 வது காதியான் ஆண்டு மாநாட்டினை 23, 24, 25 டிசம்பர் 2022 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் உறுப்பினர்கள் இப்போதிருந்தே துஆக்கள் செய்தவாறு இந்த அருளுக்குரிய ஜல்ஸாவில் பங்கு பெறும் நிய்யத்துடன் ஏற்பாடுகளை தொடங்கி விடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த இறை மாநாட்டிலிருந்து பயன்பெறுவதற்கான நற்பேறை வழங்குவானாக. மேலும் இந்த ஜல்ஸாவை எல்லா வகையிலும் வெற்றிகரமாக ஆக்குவானாக. மேலும் அது அருளுக்குரியதாக அமைவதற்கும், நல்ல ஆன்மாக்களின் நேர்வழிக்கு காரணியாக அமைவதற்கும் தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். (நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்கஸிய்யா, காதியான்)

## வருடாந்திர இஜ்திமாக்கள் 2022

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூமனீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், மஜ்லிஸ் லஜ்னா இமாயில்லாஹ் ஆகிய கிளை அமைப்புகளுக்கான இஜ்திமாக்களை 21, 22, 23 அக்டோபர் 2022 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு பரிவுகூர்ந்து ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இதற்கேற்ப துஆக்கள் செய்தவாறு இந்த இஜ்திமாக்களில் பங்கு பெறுவதற்கு எல்லா முயற்சிகளையும் செய்யுங்கள்.

(சத்ர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, பாரத்)

## அஹ்மதி மாணவர்களின் கவனத்திற்கு (ஜாமிஆ அஹ்மதிய்யா காதியானில் மாணவர் சேர்க்கை)

ஜாமிஆ அஹ்மதிய்யா காதியான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் நிறுவப்பட்ட தூய நிறுவனம் ஆகும். அங்கிருந்து இதவரை நூற்றுக்கணக்கான ஆலிம்களும், முபல்லிக்மார்களும் படித்து முடித்து இஸ்லாத்தின் உண்மையான போதனைகளை உலகின் எல்லைகள் வரை சென்றடையச் செய்யும் கடமையை நிறைவேற்றி வருகின்றார்கள். ஸய்யிதுனா ஹஸ்ரத் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களும் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் நிறுவப்பட்ட இந்த தூய மார்க்க நிறுவனத்திலிருந்து கல்வி பயின்று ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். எனவே ஸய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யஹுல்லாஹ்) அவர்களின் வழிகாட்டலின் அடிப்படையில் அதிக அதிகமான வாக்கிஃபீனே நவ் மாணவர்களும், வாக்கிஃபீனே நவ் அல்லாத மாணவர்களும் அஹ்மதிய்யா ஜாமிஆவில் சேர்ந்து மார்க்க கல்வி பயின்று ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்கு முன் வர வேண்டும். அஹ்மதிய்யா ஜாமிஆவில் சேர்வதற்காக ஏப்ரல் மாதம் 2022 லிருந்து நடவடிக்கைகள் தொடங்கி விட்டன. தற்போதைய சூழலில் அஹ்மதிய்யா ஜாமிஆவில் சேர்வதற்கு விருப்பம் கொண்ட மாணவர்களின் சேர்க்கை தொடர்பான நடவடிக்கைகள் ஆன்லைன் மூலமாக நடைபெறுகின்றன. எனவே ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேர விரும்பும் மாணவர்கள் இந்திய வக்ஃபே நவ் (நஸாரத் தஃலீம்) துறையை தொடர்பு கொள்ளவும். மேலும் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் சேருவதற்கான விண்ணப்ப படிவத்தை விரைவாக பூர்த்தி செய்து இந்திய வக்ஃபே நவ் அலுவலகத்திற்கு இமெயில் மூலம் அனுப்பி வைக்கவும். ஜாமிஆவில் சேர்வதற்கான விதிமுறைகளை அறிந்து கொள்வதற்கு இந்திய வக்ஃபே நவ் துறையை தொடர்பு கொள்ளலாம்.

(சத்ர் நேஷனல் கேரியர் பிளானிங் கமிட்டி, வக்ஃபே நவ், பாரத்)

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

# ஹஸ்ரத் அமீருல் மூமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் இந்திய லஜ்னா இமாயில்லாஹ் தேசிய செயற்குழுவின் ஆன்லைன் சந்திப்பு

இந்திய லஜ்னா இமாயில்லாஹ் தேசிய செயற்குழுவிற்கு 27 நவம்பர் 2021 அன்று ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் ஆன்லைன் சந்திப்பு நிகழ்த்துவதற்கு நற்பேறு கிடைத்தது. ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இஸ்லாமாபாதிலுள்ள MTA Studio விலிருந்து இந்த சந்திப்பை நிகழ்த்தினார்கள். அதே நேரம் லஜ்னா இமாயில்லாஹ்வின் உறுப்பினர்கள் காதியானில் அமையப்பெற்றுள்ள திருக்குர்ஆன் கண்காட்சி ஹாலிலிருந்து இந்த சந்திப்பில் பங்கு பெற்றார்கள்.

ஹுஸூர் அவர்கள் அவர்கள் கேட்டதன் அடிப்படையில் நாஸிராத் செயலர் இவ்வாறு கூறினார்: அதாவது நாஸிராத்துல் அஹ்மதிய்யாவின் எண்ணிக்கை அதிலும் பெரும்பாலான எண்ணிக்கை எப்படிப்பட்டதாக உள்ளது என்றால் அவர்கள் ஏழ்மையின் வட்டத்தில் வருகின்றார்கள். அப்போது ஹுஸூர் அன்வர் அவர்கள் அந்த நாஸிராத் சிறுமிகள் பள்ளிக் கூடத்திற்கு செல்கின்றார்களா? என்று கேட்டார்கள். அதற்கு, சிறுமிகள் பள்ளிக்கு செல்கின்றனர் என்றும், எங்கு கூலித் தொழில் செய்கின்ற மக்கள் இருக்கின்றார்களோ அதிலும் குறிப்பாக கிராமப்புற பகுதிகளில் சில கஷ்டங்கள் உள்ளன என்றும் செகரட்டரி சாஹிபா கூறினார்கள்.

அதற்கு ஹுஸூர் அன்வர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: பெண் பிள்ளைகளுக்கு கல்வி பயில ஆர்வம் ஏற்படும் வகையில் கிராமப்புற பகுதிகளில் முயற்சி செய்யுங்கள். நாஸிராத் சிறுமிகள் 15 வயது வரை உங்களிடத்தில் இருக்கின்றனர். அந்த நேரத்தில் 9 ஆம் வகுப்பு வரை அவர்கள் குறைந்தபட்சம் படித்திருக்க வேண்டும். மெட்ரிக் ஆவது அவர்கள் படித்து விட வேண்டும். அஹ்மதி சிறுமிகள் கல்வியறிவு பெற்றிடுவதற்கு ஏதுவாக அதிகப்பட்சம் கல்வி பயில்வதற்கு முயற்சி செய்யுங்கள்.

லஜ்னா இமாயில்லாஹ்வின் ஓர் உறுப்பினர் இவ்வாறு கேள்வி கேட்டார். ஹுஸூர்! பல மஜ்லிஸ்களிலிருந்து உறுப்பினர்கள் இவ்வாறு கேள்வி கேட்கின்றனர். அதாவது அவர்கள் தமது பகுதியில் தப்லீக்கிற்காக செல்கின்றபோது முதலில் அந்த மக்கள் மிகவும் கவனத்துடன் கேட்கின்றனர். ஆனால் நாம் அஹ்மதிகள் ஆவோம் என்பது அவர்களுக்கு தெரிந்தவுடன் அவர்கள் எங்களுடனான தொடர்பை முறித்துக் கொள்கின்றனர். அவ்வாறான நிலையில் நாங்கள் எப்படி தப்லீக் செய்வது?

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: விஷயம் என்னவென்றால், முதலில் அவர்களுக்கு நல்ல விஷயங்களை கூறுங்கள். அவர்களை உங்களுடன் இணைத்துக் கொள்ளுங்கள். ஒரு நீண்ட காலம் உங்களுடன் சேர்த்து வையுங்கள். பறவைகளை உங்களுடன் சேர்த்து வையுங்கள். அவர்கள் உங்கள் பக்கம் ஈர்க்கப்பட்டு வந்துவிடும் அளவிலும், ஓடோடி வருகின்ற அளவிலும் அவர்களுக்கு தர்பிய்யத் வழங்குங்கள் என்று திருக்குர்ஆன் போதனை நல்கியுள்ளது. எனவே முதலில் இவ்வாறு அவர்களுடன் தொடர்பை நிலைநாட்டுங்கள். தொடர்பு நிலைநாட்டப்பட்ட பிறகு பின்னர் அவர்கள் உங்களின் கூற்றுகளை கேட்பார்கள். நீங்கள் அஹ்மதி என்பது அவர்களுக்கு தெரிந்தவுடன் பின்னர் மெது மெதுவாக அவர்கள் சுயமே தெரிந்து கொள்வர். எவர்கள் விட்டு விட்டு செல்ல வேண்டுமோ அவர்கள் விட்டு விட்டு சென்று விடுவார்கள். இருந்தபோதிலும் எவர்கள் அதன் பின்னரும் தொடர்பு வைப்பார்களோ அவர்கள் உங்களின் கூற்றுகளை செவிமடுப்பார்கள். வலுக்கட்டாயமாக நீங்கள் யாருக்கும் தப்லீக் செய்ய முடியாது. பலவந்தமாக யாரையும் அஹ்மதியாக்க முடியாது.

எனவே எவர் வர வேண்டுமோ அவர் தூய்மையுடனும், நன்றியுடனும் வரட்டும். அதற்காக ஒரு தொடர் முயற்சி உள்ளது. அதை நீங்கள் செய்ய வேண்டும். அவ்வாறு நீங்கள் செய்யுங்கள். நீங்கள் தனிப்பட்ட தொடர்பை முதலில் வையுங்கள். பின்னர் சுயமே மெதுமெதுவாக அவர்களுக்கு இந்த விஷயம் தெரிந்து விடும். அதாவது இவர்கள் கூறுகின்ற விஷயங்களுக்கேற்ப இவர்கள் செயல்டவும் செய்கின்றார்கள். இஸ்லாமிய போதனைக்கேற்ப செயல்படுகின்றார்கள். உறுதியான முஸ்லிம்கள் ஆவர். தொழுகைகளை பேணுகின்றனர். திருக்குர்ஆன் ஓதுகின்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கத்மே நுபுவ்வத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ளனர். பின்னர் காலத்தின் இமாமையும் ஒப்புக் கொள்கின்றனர் என்பதெல்லாம் அவர்களுக்கு தெரிந்து விடும்போது அவர்களிடம் கவனம் ஏற்படும். எனவே ஒரு தொடர் முயற்சி அவசியமாகும். அதனை நாம் செய்ய வேண்டும். அவர்கள் விட்டு விட்டார்கள். சென்று விட்டார்கள் என்று கூறுவது சரியல்ல. அவர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பது அவசியமாகும். தொடக்கத்தில் அஹ்மதி என்று கூறுவதற்கு அவசியமில்லை. மாறாக, உங்களின் செயலிலிருந்து சுயமே அவர்களுக்கு தெரிந்து விட வேண்டும். நீங்கள் அஹ்மதிகள் என்பதை அவர்களுக்கு கூற வேண்டிய அவசியமில்லை. சரிதானா? அவ்வாறு செய்தால் இந்தத் தொடர்பில் நிலைபெற்றிருப்பார்கள்.

இஷாஅத் செயலர் சாஹிபா, நாங்கள் எங்களது மிஸ்பாஹ் பத்திரிகையை வருடத்தில் 2 முறை வெளியிடுகின்றோம் என்று கூறினார். அந்த வெளியீட்டை நீங்கள் மாதாந்திர பத்திரிகையாக இல்லையென்றாலும் 3 மாதத்தில் ஒரு முறையாவது வெளியிட வேண்டும் என்று ஹுஸூர் அவர்கள் வழிகாட்டினார்கள். மேலும் தென் இந்தியாவிற்காக அதில் 2, 3 பக்கங்களை தர்பிய்யத் தலைப்புகளுக்காக ஒதுக்க வேண்டும். அவர்களும் படித்து வந்தால் அவர்களுக்கும் பயன் கிடைக்கும். லஜ்னா இமாயில்லாஹ்விற்காக அவர்கள் ஒரு Website ஐ உருவாக்க வேண்டும். அதில் தங்களது செயல்பாடுகளைப் பற்றிய செய்திகளை Upload செய்ய வேண்டும். லஜ்னாக்களுக்காக மார்க்க கட்டுரைகளை உருவாக்க வேண்டும். அப்போது தான் அவர்கள் பயன் பெற முடியும்.

தஜ்னீத் செகரட்டரி அவர்களிடம் உரையாடியவாறு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: அவர்கள் அஹ்மதி பெண்களின் கல்வி தொடர்பான Record களை வைக்க வேண்டும். அப்போதுதான் யாருக்கு கல்வி தொடர்பான உதவி தேவைப்படுகின்றது? என்பது தெரிய வரும். மேலும் அவர்களை கருத்தில் கொள்ளவும் முடியும்.

சந்திப்பின்போது ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: அஹ்மதி பெண்கள் மருத்துவம் மற்றும் கல்வித் துறையில் முன்னால் வருவதற்கு ஊக்குவிக்க வேண்டும். அப்போதுதான் அஹ்மதிய்யா மருத்துவமனைகள் மற்றும் பள்ளிக் கூடங்களின் கோரிக்கைகளை முழுமை செய்ய முடியும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் வக்ஃபே ஜதீத் திட்டத்தில் நாஸிராத் சிறுமிகளின் பங்களிப்பு மற்றும் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்தினார்கள்.

தஹ்ரீகே ஜதீத் செயலர் மற்றும் வக்ஃபே ஜதீத் செயலர் ஆகியோருடன் உரையாடியவாறு ஹுஸூர் அன்வர் அவர்கள், தாய்மார்களுக்கு ஊக்கமளித்து வாருங்கள். அதன் மூலம் அவர்கள் நாஸிராத் சிறுமிகளையும், சிறிய வயதுடைய பெண் பிள்ளைகளையும் வக்ஃபே ஜதீத் திட்டத்தில் இணைப்பார்கள் என்று கூறினார்கள்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணையக் கூடிய புதிய அஹ்மதி பெண்களின் கல்வி மற்றும் தர்பிய்யத் தொடர்பான தொண்டுகள் ஒப்படைக்கப்பட்டுள்ள புதிய பெண் அஹ்மதிகளுக்கான செயலரிடம் ஹுஸூர் அன்வர் அவர்கள் உரையாடியவாறு இவ்வாறு கூறினார்கள்:

கல்வியறிவு பெறாத லஜ்னா உறுப்பினர்களின் தர்பிய்யத்திற்காக நீங்கள் சிறந்த திட்டங்களை உருவாக்க வேண்டும். கல்வியறிவு பெற்ற புதிய பெண் அஹ்மதிகளுக்காக தனியாக ஒரு திட்டம் இருக்க வேண்டும். அதேபோன்று முஸ்லிம்களிலிருந்து இணைந்த பெண்மணிகளை கருத்தில் கொண்டவாறு அவர்களின் தேவைக்கேற்ப நீங்கள் திட்டம் வகுக்க வேண்டும். அதேபோன்று இந்துக்கள், கிறிஸ்தவர்களுடன் தொடர்பில் உள்ள பெண்களுக்காக தனியான ஒரு திட்டத்தை நீங்கள் உருவாக்க வேண்டும். இவ்வாறு பல்வேறு மக்களின் தேவைகளை நீங்கள் கருத்தில் கொள்ள நேரிடும்.

(நன்றி: அல்ஃபஸ்ல் பத்திரிகை இன்டர்நேஷனல் 14 டிசம்பர் 2021)

*நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

***தொலைபேசி எண்: 1800 103 2131***

இந்த **TOLL FREE** எண்ணில் ஃபோன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 19 May 2022 Issue No. 20

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஸய்யிதுனா அமீருல் மூமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜெர்மனி சுற்றுப் பயணம் – 2013

**22 ஜூன் 2013 (சனிக்கிழமை)**

ஸய்யிதுனா அமீருல் மூமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப ஜெர்மனி சுற்றுப்பயணத்தில் செல்வதற்காக காலை 10:00 மணியளவில் தமது வீட்டிலிருந்து வெளியே வருகை தந்தார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை வழியனுப்பி வைப்பதற்காக ஜமாஅத் உறுப்பினர்களான ஆண்களும், பெண்களும் லண்டன் ஃபஸ்ல் பள்ளிவாசலின் வெளி வளாகத்தில் காலையிலேயே ஒன்றுகூடி இருந்தனர்.

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சிறிது நேரம் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு மத்தியில் அமர்ந்திருந்தார்கள். ஒவ்வொருவரும் தமது அன்பிற்குரிய எஜமானரை பார்த்துக் கொண்டனர். மேலும் சந்திப்பிற்கான நற்பேறை பெற்றனர்.

கானாவின் அமீர் மற்றும் முபல்லிக் இன்சார்ஜ் மதிப்பிற்குரிய அப்துல் வஹ்ஹாப் பின் ஆதம் சாஹிப் அவர்களை ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நினைவுகூர்ந்தார்கள். (அன்னார் அந்த நாட்களில் லண்டனில் தங்கியிருந்தார்கள்). வஹ்ஹாப் ஆதம் சாஹிப் ஆஜராகி கை குலுக்கும் கண்ணியத்தைப் பெற்றார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் பரிவுகூர்ந்து அன்னாருடன் உரையாடினார்கள். அதன் பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூட்டுத் துஆ செய்து வைத்தார்கள். அதன் பிறகு 3 வண்டிகளை உள்ளடக்கிய பயணக் குழுவானது பிரிட்டனின் டோவர் நகரத்தை நோக்கி புறப்பட்டது.

டோவர் துறைமுகம் இங்கிலாந்தின் பிரபலமான துறைமுகங்களில் ஒன்றாகும். லண்டன் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் வசிக்கக் கூடிய ஐரோப்பிய மக்கள் ஐரோப்பிய நாடுகளின் பயணத்தை Ferries மூலமாக இந்த துறைமுகத்திலிருந்து செய்கின்றனர்.

டோவர் நகரத்திற்கு செல்லும்போது டோவரிலிருந்து 11 மைல் தொலைவிற்கு முன்னால் கடலுக்கு கீழே பிரிட்டனின் மற்றும் பிரான்ஸின் கடற்புற பகுதிகளை இணைக்கக் கூடிய Channel Tunnel வருகிறது. இந்த சுரங்கத்தின் மூலமாக கார்களும், ஏனைய வண்டிகளும் இரயிலில் பிரான்ஸின் நகரமான Calais வரை சென்றடைகின்றன. இன்று அதே Channel Tunnel மூலமாக குழுவின் பயண நிகழ்ச்சி அமைந்திருந்தது.

யூ.கே ஜமாஅத்தின் அமீர் மதிப்பிற்குரிய ரஃபீக் அஹ்மது ஹயாத் சாஹிப் அவர்களும், கானாவின் அமீர் சாஹிப் மற்றும் இன்சார்ஜ் மதிப்பிற்குரிய அப்துல் வஹ்ஹாப் பின் ஆதம் சாஹிப் அவர்களும், மதிப்பிற்குரிய அதாவுல் முஜீப் ராஷித் சாஹிப் அவர்களும் மதிப்பிற்குரிய வஸீம் சாஹிப் சவுத்ரி அவர்களும், மதிப்பிற்குரிய முனீருத்தீன் சாஹிப் ஷம்ஸ் அவர்களும், மதிப்பிற்குரிய முபாரக் அஹ்மது சாஹிப் ஜஃபர் அவர்களும், அஹ்மது நஜிம் சாஹிப் அவர்களும், மதிப்பிற்குரிய ஸஹூர் அஹ்மது சாஹிப் அவர்களும், மதிப்பிற்குரிய மேஜர் மஹ்மூத் அஹ்மத் சாஹிப் (சிறப்பு பாதுகாப்பு அதிகாரி) அவர்களும், இம்ரான் ஸஃபர் சாஹிப் அவர்களும், மேலும் குத்தாமின் பாதுகாப்பு குழுவினரும் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை வழியனுப்பி வைப்பதற்காக Channel Tunnel வரை பயணக் குழுவுடன் வந்திருந்தனர்.

சுமார் 1:30 மணி நேரம் பயணம் செய்த பிறகு Channe Tunnel ஐ சென்றடைந்தோம். லண்டனிலிருந்து புறப்பட்ட பிறகு இந்த இடைப்பட்ட 1:30 மணி நேர பயணத்தில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் அலுவலக கடிதங்களை படித்தார்கள். மதிப்பிற்குரிய முனீர் அஹ்மது ஜாவீத் சாஹிப் அவர்கள் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் வண்டியின் முன்னால் அமர்ந்திருந்து கடிதங்களை சமர்ப்பித்து வழிகாட்டல்களை பெற்றுக் கொண்டார்கள்.

Channel Tunnel லிருந்து சுமார் 1 கி.மீ முன்பு Parking Area வில் ஓரிடத்தில் வண்டியை நிறுத்தி மதிப்பிற்குரிய ஸஹூர் அஹ்மது சாஹிப் (Private Sec. அலுவலகம்) அவர்களிடம் அந்த கடிதங்கள் ஒப்படைக்கப்பட்டன. மேலும் அங்கிருந்து பயணக்குழுவினருடன் வந்திருந்த சகோதரர்கள் தமது அன்பிற்குரிய எஜமானரை வழியனுப்பி வைத்தார்கள். அதன் பிறகு Imigration நடவடிக்கைகள் தொடங்கின. ஏனைய பயண விவகாரங்கள் முடிவடைந்த பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் Channel Tunnel ன் Parking Area விற்கு வருகை தந்தார்கள்.

Signal தொழில்நுட்ப கோளாறின் காரணமாக அனைத்து ரயில்களும் தனது குறிப்பிட்ட நேரத்திலிருந்து சுமார் 1 மணி நேர கால தாமதத்துடன் புறப்பட்டுச் சென்றன. இந்த இரயில் 2 அடுக்கு கொண்டதாக இருந்தது. அதனுள் ஒரே நேரத்தில் 180 கார்கள் பயணிகளுடன் Board செய்யப்படுகின்றன. பயணக் குழுவின் வண்டிகள் இரண்டாவது அடுக்கு மாடியில் Board செய்யப்பட்டது. இரயில் 1:15 மணியளவில் மணிக்கு 140 கி.மீ வேகத்தில் பிரான்ஸின் கடற்கரை நகரமான Calais நோக்கி புறப்பட்டது. அந்த சுரங்கத்தின் மொத்த நீளம் சுமார் 31 மைல் ஆகும். 31 மைல் நீளம் கொண்ட அந்த சுரங்கத்தில் 24 மைல் கொண்ட பகுதி கடலுக்கு கீழே உள்ளது. அந்த சுரங்கத்தின் மிகவும் ஆழமான பகுதி கடல் மட்டத்திலிருந்து 75 மீட்டர் அதாவது 250 அடி கீழே உள்ளது. இதுவரை கடலுக்கு அடியில் அமைக்கப்பட்ட உலகத்தின் எல்லா சுரங்கத்தை விடவும் இது மிகப் பெரிய சுரங்கம் ஆகும்.

சுமார் அரை மணி நேரப் பயணத்திற்குப் பிறகு பிரான்ஸ் நாட்டின் உள்ளூர் நேரத்திற்கேற்ப 2:45 மணியளவில் பிரான்ஸின் நகரமான Calais ஐ சென்றடைந்தோம். பிரான்ஸ் நாட்டின் நேரம் இங்கிலாந்தின் நேரத்திலிருந்து 1 மணி நேரம் முன்பு உள்ளது. ரயில் நின்ற பிறகு சுமார் 5 நிமிட இடைவேளைக்குப் பிறகு வண்டிகள் Train லிருந்து வெளியே வந்தன. மேலும் மோட்டார் சாலையில் பயணம் ஆரம்பமானது.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கேற்ப இங்கிருந்து சுமார் 154 கி.மீ தொலைவிலுள்ள பெல்ஜியத்தின் பர்ஸில்ஸிற்கு முன்பாக Wettern என்ற ஊரில் மோட்டார் சாலையின் ஓரத்தில் அமைந்துள்ள ஒரு Restaurent ன் Parking Area வில் ஜெர்மனி ஜமாஅத்திலிருந்து வருகை தந்திருந்த குழுவினர் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை வரவேற்க தயாராக இருந்தனர். மேலும் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப அந்த Restautent ல் மதிய உணவிற்குப் பிறகு லுஹர் மற்றும் அஸர் தொழுகைகள் தொழுவதற்கான ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது. ஜெர்மனி ஜமாஅத்தின் குழுக்களின் இரண்டு வண்டிகள் Escort கொடுப்பதற்காக Calais வந்தடைந்திருந்தன. பயணக் குழுவின் வண்டிகள் இரயிலிருந்து வெளியேறி மோட்டார் சாலைக்கு வந்தவுடன் சில கி.மீ ற்குப் பிறகு ஒரு பெட்ரோல் பம்ப்பின் Parking Area வில் நின்றிருந்த அந்த வண்டிகள் பயணக் குழுவிற்கு Escort கொடுத்தன. பிரான்ஸின் எல்லையில் 35 கி.மீ பயணத்தை கடந்த பிறகு எல்லையைத் தாண்டி பெல்ஜியம் நாட்டில் வண்டிகள் நுழைந்தன. மேலும் 119 கி.மீ பயணம் செய்து 4:15 மணியளவில் Wettern என்ற பெயர் கொண்ட ஊரில் மோட்டார் சாலையின் ஓரத்தில் அமைந்திருந்த Restaurent ஐ வந்தடைந்தோம்.

அங்கு மதிப்பிற்குரிய அப்துல்லாஹ் வாக்ஷ் ஹாவுஸர் சாஹிப் (ஜெர்மனி ஜமாஅத்தின் அமீர்), மதிப்பிற்குரிய கைதர் அலி ஜஃபர் சாஹிப் (ஜெர்மனி முபல்லிக் இன்சார்ஜ்), தேசிய ஜெனரல் செயலர் மதிப்பிற்குரிய முஹம்மது இல்யாஸ் சாஹிப், துணை ஜெனரல் செகரட்டரி மதிப்பிற்குரிய யஹ்யா ஸாஹித் சாஹிப், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் சத்ர் மதிப்பிற்குரிய ஹஸ்னாத் அஹ்மது சாஹிப், மதிப்பிற்குரிய அப்துல்லாஹ் சுப்ரா சாஹிப், மதிப்பிற்குரிய ஃபைஸான் அஹ்மது சாஹிப் (சிறப்பு பாதுகாப்புக் குழு

*(தொடர்ச்சி 8 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad